**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் அவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

## 2. அரசினர் தனித் தீர்மானம்

### காவேரி படுகையில் மேகதாது அல்லது வேறு எந்தவொரு இடத்திலும் தமிழ்நாட்டின் இசைவின்றி எவ்வித கட்டுமானப் பணிகளையும் மேற்கொள்ளக் கூடாது என கர்நாடக அரசுக்கு உத்தரவிட மத்திய அரசை வலியுறுத்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் தனித் தீர்மானம். மேகதாது அணை பிரச்சினை குறித்த தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி உரிமையை மீட்டெடுக்க கால் நூற்றாண்டுக்கும் மேலாக தொடர் சட்டப் போராட்டம் நடத்தி வெற்றி கண்டு, விவசாயம் செழிக்க செய்திட்ட தெய்வத் திருமகள் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட, நெடிய சட்டப் போராட்டத்திற்குப் பின்னர் தமிழ்நாட்டுக்கு உரிய காவேரி நீர் கிடைக்கும் என்று நாம் அனைவரும் எதிர்பார்க்கும் இந்த நேரத்தில், மத்திய நீர்வளக் குழுமம் கர்நாடகத்திலுள்ள மேகதாதுவில் அணை கட்டுவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க கர்நாடக அரசுக்கு 22-11-2018 அன்று அனுமதி வழங்கிய செயல் நம் அனைவரையும் மிகவும் கொதிப்படைய வைத்திருக்கிறது. இதைத் தமிழ்நாட்டிலுள்ள அனைவரும் கடுமையாக எதிர்த்து வருகின்றோம். இந்த நிலையில் தமிழ்நாட்டு மக்களின் நலனை முன்னிறுத்தும் வகையில், நாம் அனைவரும் ஒருமித்த*

*2018 டிசம்பர் 6*] [*திரு. எடப்பாடி கே. பழனிசாமி*]

*கருத்தோடு நம் உணர்வையும், எதிர்ப்பையும், கண்டனத்தையும், தமிழ்நாட்டின் நிலைப்பாட்டையும், ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளையும் பிரதிபலிக்கும் விதத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானத்தை அவையில் நான் முன்மொழிய விழைகின்றேன். இந்தத் தீர்மானத்தின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளை எடுத்துரைத்து, அதனை ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.*

## தீர்மானம்

*"மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, இம்மாமன்றத்தில் 5-12-2014, 27-3-2015 ஆகிய நாட்களில் கர்நாடக அரசு மேகதாதுவில் புதிய அணை கட்டக் கூடாது என ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை கருத்தில் கொள்ளாமலும், உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளவாறு கீழ்படுகை மாநிலங்களின் முன் அனுமதி பெறாமல், கர்நாடக அரசு எந்த ஒரு திட்டத்தையும் செயல்படுத்தக் கூடாது என்பதையும் மீறி, தற்பொழுது கர்நாடக அரசு மேகதாது அணை கட்டுவதற்கான ஆரம்பக் கட்டப் பணிகளைத் துவக்க உள்ளதற்கும், மேகதாதுவில் புதியதாக அணை கட்ட விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு மத்திய நீர்வளக் குழுமம் 22-11-2018 அன்று அனுமதி வழங்கியதற்கும் இம்மாமன்றம் கடும் கண்டனத்தையும், எதிர்ப்பையும் தெரிவித்துக்கொள்கிறது.*

*மத்திய நீர்வளக் குழுமம் வழங்கிய அனுமதியைத் திரும்பப்பெற அக்குழுமத்திற்கு மத்திய நீர்வள ஆதார அமைச்சகம் உடனடியாக உத்தரவிட வேண்டும் என்றும் இம்மாமன்றம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.*

*காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை மற்றும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு ஆகியவற்றை மீறும் வகையில், கர்நாடக அரசோ அல்லது அதன்கீழ் இயங்கும் நிறுவனங்களோ, கர்நாடகாவில் உள்ள காவேரி படுகையில், மேகதாது அல்லது வேறு எந்தவொரு இடத்திலும் தமிழ்நாட்டின் இசைவின்றி எவ்வித கட்டுமானப் பணிகளையும் மேற்கொள்ளக் கூடாது என்று கர்நாடக அரசுக்கு மத்திய அரசு உத்தரவிட வேண்டும் என இம்மாமன்றம் கேட்டுக்கொள்கிறது."*

*[2018 டிசம்பர் 6*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

*பிற்பகல் 4-05*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அது தேவையில்லை. இது அரசினர் தனித் தீர்மானம்தான். அதை வழிமொழிவது இல்லை. (குறுக்கீடு) இல்லை, சொல்லுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

**திரு. துரைமுருகன்:** Sir, I am on a point of order. *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 5-12-2014 மற்றும் 27-3-2015 ஆகிய நாட்களில் மேகதாதுவில் அணை கட்டக் கூடாது என்பது குறித்து இந்த மாமன்றத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். 5-12-2014 ஆம் நாளைய தீர்மானத்தில், காவேரி நடுவர் மன்றத்தின் இறுதியாணைக்கு முரணான வகையில், கர்நாடக அரசு மேகதாதுவில் இரண்டு புதிய அணைகள் கட்ட முயற்சிப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு தீர்மானங்களிலும் இரண்டு அணைகள் அங்கே கட்டுவதாகச் சொல்லியிருக்கிறோம். அதேமாதிரி, இவர்கள் 18-11-2014-ல்* I.A.-*ஐ* Supreme Court-*ல் போட்டார்கள்.* Supreme Court, *"இரண்டு அணைகள் கட்டக் கோரியுள்ள தொழில்நுட்ப ஆய்வுக் குழுவினர்* Expression of Interest-*ஐத் திரும்பப் பெற வேண்டும். இவ்விரு அணைகளைக் கட்டும் பணியையோ அல்லது வேறு எந்தப் பணியையோ..." எனச் சொல்லியிருக்கிறது. இரண்டு அணைகள் என்று நீங்களும் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், கர்நாடக அரசு மேகதாதுவில் புதிய அணை கட்டக் கூடாது என்று இன்றைக்கு உங்களுடைய தீர்மானத்தில் சொல்லியிருக்கிறீர்கள். அணைகள் என்பது* plural; *புதிய அணை என்பது* singular. I want to know from the Hon'ble Chief Minister, *அங்கே ஒரு அணை கட்டுகிறார்களா அல்லது இரண்டு அணைகளைக் கட்டுகிறார்களா? ஏனென்றால், 5,960 கோடி ரூபாய், கிட்டத்தட்ட 6,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேகதாதுவில் 66 டி.எம்.சி. அடி கொள்ளளவில் அணை கட்டுவதாகச் சொல்கிறார்கள். 66 டி.எம்.சி. அடி என்றால், கிருஷ்ணராஜசாகர் அணையைவிட*

*2018 டிசம்பர் 6*] [திரு. துரைமுருகன்]

*ஒன்றரை மடங்கு பெரியது. மேட்டூர் அணையில் முக்கால் பகுதி. ஆனால், 15 மீட்டர் விட்டமுள்ள மேகதாதுவில் 66 டி.எம்.சி. அடி கொள்ளளவில் அவ்வளவு பெரிய அணையைக் கட்ட முடியாது. ஏற்கெனவே அவர்கள் குத்தாட்டிலே ஒரு அணை கட்டுவதாகச் சொன்னார்கள். ஆகையினால், என்னைவிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிந்திருக்கும் என்ற வகையில், நான் தெரிந்துகொள்ள விரும்புவது, கிட்டத்தட்ட 6,000 கோடி ரூபாய் செலவிலே, 66 டி.எம்.சி. அடி கொள்ளளவு கொண்ட ஓர் அணையை மேகதாதுவில் கட்ட முடியாது. ஏனென்றால், 15 மீட்டர் விட்டம்தான் அது. அதுபற்றி அவருக்கும் தெரியும். ஆகையினால், இவர்கள் இதைக் காண்பித்துவிட்டு வேறிடத்தில் அணை கட்டுகிறார்களா? ஆகவே, ஒரு அணையா அல்லது இரண்டு அணைகளா என்று சொல்ல வேண்டும். ஆனால், மேகதாது அல்லது வேறு எந்த இடத்திலும் அணை கட்டக் கூடாது என்று நீங்கள் இந்தத் தீர்மானத்தில் சொல்லியிருக்கிறீர்கள்; நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், 2008-ல் நாங்கள் ஒரு* I.A.-*ஐப் போட்டோம்.*

*இந்தத் தீர்மானத்தில்கூட திருத்தம் கொண்டு வரலாம். கிருஷ்ணராஜசாகர் அணைக்குக் கீழே, மேட்டூர் அணைக்கு மேலே எந்த இடத்திலும் கர்நாடக அரசு தமிழகத்தினுடைய அனுமதி இல்லாமல் அணை கட்டக் கூடாது என்று தீர்மானத்தில் இருக்குமானால், தீர்மானம் இன்னும் வலுவுள்ளதாக இருக்கும். மேலும், அணை ஒன்றா அல்லது இரண்டா என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவிக்க வேண்டும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், சில பல கருத்துகளை இங்கே பதிய வைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே கர்நாடகத்தினுடைய முன்னாள் முதலமைச்சர் திரு. சித்தராமையா அவர்கள் கர்நாடகத்தில் இரண்டு அணைகளைக் கட்டுவதற்குரிய* estimate-*ஐச் சொல்லி மத்திய அரசிடம் அனுமதி கோரினார்கள். அந்த நேரத்தில் நாம் இரண்டு அணைகளுக்குமே அனுமதி கொடுக்கக் கூடாது என்று சட்டமன்றத்தில் தீர்மானம் இயற்றி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு இதை*

உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்று வழக்கும் போட்டது. அந்த வழக்கு இன்றும் நிலுவையில் இருக்கிறது. இப்பொழுது இருக்கின்ற பிரச்சினை, மேகதாது அணை பிரச்சினை மட்டுமே. அந்த அணைக்குத்தான் சுற்றுச்சூழல் துறையினர் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். மத்திய நீர்வளக் குழுமமும் அனுமதி கொடுத்திருக்கிற ஒரு செய்தி நமக்கு வந்திருக்கிறது. இதைத்தான் சட்டமன்றப் பேரவையிலே தீர்மான வடிவிலே கொண்டு வந்திருக்கிறோம். ஏற்கெனவே மேகதாது அணை பிரச்சினை மட்டுமல்லாமல், காவேரி நீர் படுகையில் எந்த ஓர் அணையையும் நம்முடைய அனுமதியில்லாமல் கட்டக் கூடாது என்று நீர்வள சட்டத்தில் இருக்கிறது; இந்திய அரசமைப்புச் சட்டத்திலும் இருக்கிறது. அப்படி இருக்கும்போது, கர்நாடக அரசு சட்டத்திற்குப் புறம்பாக அந்த அணைகளைக் கட்டுவது நியாயம் இல்லையென்று வழக்காடு மன்றத்தில், உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டு அதுகுறித்த வழக்கு இன்றைக்கும் இருக்கிறது. இப்படி ஒரு வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கின்றபொழுது, எப்படி நம்முடைய அனுமதியைப் பெறாமல் சுற்றுச்சூழல் துறையும், மத்திய நீர்வளக் குழுமமும் அனுமதி கொடுத்தது? அதைத்தான் இன்றைக்குக் கண்டித்து, நம்முடைய சட்டமன்றப் பேரவையில் தீர்மான வடிவிலே நாம் கொண்டு வந்துள்ளோம். ஆக, அதை மத்திய அரசுக்குத் தெரிவித்து, நம்முடைய கடும் கண்டனத்தைத் தெரிவிப்பதற்காகத்தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-10

இன்றைக்கு இருக்கிற பிரச்சினை 2 அணைகள் அல்ல, ஒரு அணை. ஒரு அணை அல்ல, 2 அணைகள் அல்ல, 3 அணைகள் என இப்படி எத்தனை அணைகளாக இருந்தாலும், நம்முடைய எல்லைக்கு மேலே கர்நாடகத்தில் இருக்கின்ற காவேரி படுகையில் எந்த அணை கட்டினாலும் அது சட்டத்திற்குப் புறம்பானது என்பதையெல்லாம் நாம் இங்கே பதிலாகக் கொண்டு வரலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் இப்போது கேட்கின்றேன். இப்போது

*2018 டிசம்பர் 6*] [திரு. துரைமுருகன்]

*கிட்டத்தட்ட 6 ஆயிரம் கோடி ரூபாயில் 66 டி.எம்.சி. அடியில் மேகதாதுவில் அணை கட்டுவது என்று அவர்கள் சொல்வது,* it is a cock and bull story; *நம்மை ஏமாற்றப் பார்க்கின்றார்கள். 'மேகதாது அல்லது வேறு எந்தவொரு இடத்திலும். . .' என்று நீங்கள் தீர்மானத்தில் போட்டிருக்கின்றீர்கள்; 'கிருஷ்ணராஜசாகர் முதல் மேட்டூர் வரை எந்த இடத்திலும் அணை கட்டக் கூடாது' என்று தீர்மானத்தில் இருந்தால் அது மிகவும் அழுத்தமாக இருக்கும் என்றுதான் நான் சொல்கின்றேன். நான் இப்போது உங்களை மீண்டும் கேட்பது, அது ஒரு அணையா, இரண்டு அணைகளா என்பதுதான். அவர்கள் நம்மை ஏமாற்றுகின்றார்கள். இந்தத் தீர்மானத்தில் நான் மாறுபடவில்லை, ஆனாலும், இதைச் சொல்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மேகதாது என்றுதான் இருக்கின்றது. அதற்குத்தான் ஆய்வு செய்வதற்கு அனுமதி கொடுத்திருக்கின்றார்கள். நம்முடைய கொள்கை, நம்முடைய அடிப்படை உரிமை, நம்முடைய அனுமதி இல்லாமல் கர்நாடகாவில் இருக்கின்ற காவேரி படுகையில் நீரைத் தேக்குவதற்கு எந்த ரூபத்திலும் அணைகள் கட்டக் கூடாது என்பதுதான் நம்முடைய வாதம்; இது நம்முடைய உரிமை. மேல் பகுதியிலிருந்து வழிந்தோடி வருகின்ற நீர் தொடர்பான இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையில் கீழே இருக்கின்ற மாநிலங்களின் அனுமதியைப் பெற்றுதான் மேலே இருக்கின்ற மாநிலங்கள் அணையோ அல்லது* check dam-*மோ கட்ட வேண்டி இருக்கின்றது. ஆந்திராவில், பாலாற்றில்கூட* check dam *கட்டும்போது மாண்புமிகு அம்மா அவர்கள், உச்ச நீதிமன்றம் சென்று அதைத் தடுத்து நிறுத்தினார்கள். அதேபோன்றுதான் இதுவும். மேகதாது மட்டுமல்ல, எந்த ஓர் அணையையும் நம்முடைய அனுமதி இல்லாமல் கட்டக் கூடாது என்பதுதான் இன்றைய தீர்மானத்தினுடைய முழு வடிவம். இன்றைக்கு மேகதாதுவிற்கு மட்டும் அனுமதி கொடுத்திருக்கின்றார்கள். மேகதாதுவிற்கு அனுமதி கொடுக்கக் கூடாது, அதனை இரத்துச் செய்ய வேண்டும், இனிமேல் எந்த அணையைக் கட்டுவதற்கும், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க அனுமதி கொடுக்கக் கூடாது என்பதுதான் நம்முடைய கோரிக்கை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், அரசினர் தனித் தீர்மானத்தை முன்மொழிந்திருக்கின்றார். அவர் முன்மொழிந்திருக்கக்கூடிய தீர்மானத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துகளை எடுத்து வைக்கக்கூடிய வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு முதலில் நான் நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். தமிழகத்தினுடைய வாழ்வாதாரப் பிரச்சினையாக இருக்கக்கூடிய இந்தப் பிரச்சினைக்காக இங்கே சட்டமன்றத்தில் நாமெல்லாம் கூடி இருக்கின்றோம். ஏற்கெனவே கஜா புயல் டெல்டா மாவட்டங்களில் பூகோளத்தையே புரட்டிப் போட்டிருக்கின்றது. அந்தப் புயல் ஏற்படுத்தியிருக்கக்கூடிய பேரழிவினால் பல இலட்சம் விவசாயிகள், மீனவர்கள், சிறு வணிகர்கள் உள்ளிட்ட தமிழ் மக்கள். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்ற உறுப்பினர்களும் இன்றைக்கு நிறைவேற்ற இருக்கின்ற தீர்மானத்தினைப் பற்றி, அதில் இருக்கக்கூடிய சட்டப் பிரச்சினைகளைப் பற்றி, அதில் இருக்கக்கூடிய சாராம்சங்களைப் பற்றிப் பேசுவதற்காகத்தான் இங்கே கூடியிருக்கின்றோம். அதற்காகத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அரசினர் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். அதிலிருந்து விடுபட்டு, வெளியில் போய் மற்ற பிரச்சினைகளைப் பற்றி... (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். பேசுகின்ற ஒரு முயற்சியை சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்தார்களேயானால், அதற்கு நாங்களும் பதில் சொல்ல வேண்டிய கட்டாயம் இருக்கின்றது. ஆகவே, நம்முடைய தீர்மானத்தினுடைய முக்கியத்துவம் வலுவிழக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உருவாக்க வேண்டாம் என்று அவரைக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் இங்கே பேசுகின்ற அனைத்து உறுப்பினர்களுக்கும்*

*2018 டிசம்பர் 6*] [*பேரவைத் தலைவர்*]

*என்னுடைய வேண்டுகோள் என்னவென்று சொன்னால், இந்தத் தீர்மானத்தையொட்டியே பேசினால் சிறப்பாக இருக்கும். (குறுக்கீடு) இல்லை, இல்லை. இதைவிட்டு வெளியில் போனால் ஒவ்வொன்றிற்கும் மற்றவர்கள் பதில் சொல்ல வேண்டி இருக்கும். ஆகையால், அது சரியாக வராது. ஆகவே, பேசுகின்ற மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்தையொட்டி தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற நிலையிலே, இப்படியொரு நிலை வந்திருக்கின்றது என்று எடுத்துக்காட்டுவதற்காகத்தான் அதைக் குறிப்பிட்டு சொன்னேனேதவிர, நான் எந்த உள்விவகாரத்திலும் செல்ல விரும்பவில்லை. அதனை முதலில். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி பிரச்சினைக்கும், புயல் வந்ததற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை, இல்லை. திரு. வேலு, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறார். நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது இயற்கையின் சீற்றம். (குறுக்கீடுகள்) கஜா புயலை நீங்களும் கூப்பிட்டு வரவில்லை, நாங்களும் கூப்பிட்டு வரவில்லை. அது இயற்கைச் சீற்றம். அதைப்பற்றி இந்த நேரத்தில் பேசினால், நம்முடைய தீர்மானத்தின் மீதான அழுத்தம் குறைந்துவிடும் என்பதைத்தான் உங்களுக்கு நான் சொல்கின்றேன். (குறுக்கீடு)*

*பிற்பகல் 4-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், தீர்மானத்தையொட்டிப் பேசுவதே சரியானதாக இருக்கும்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** டெல்டா பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தையே இழந்து, பரிதவித்துக் கொண்டிருக்கக்கூடிய இந்த நிலையில், தவித்துக் கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்தில், இப்படியொரு நிலை, மேகதாது என்ற வடிவில் இந்தப் பிரச்சினை வந்திருக்கிறது என்பதைத்தான் நான் எடுத்துச் சொன்னேனே தவிர வேறு அல்ல. கஜா புயலின் வடு காய்வதற்கு முன்பே, விவசாயிகளின் அடிவயிற்றில் கை வைக்கக்கூடிய விதத்தில் மேகதாதுவில் அணை கட்ட மத்திய அரசு அனுமதி அளித்திருப்பது, 'குடிகெடுக்கும் கோடாரிக்கொம்பாய்' ஆகி இருக்கிறது. மேகதாது அணை கட்டுவது தொடர்பாக, இதற்கு முன்பு இதே அவையில், 2 தீர்மானங்களை நாம் நிறைவேற்றி இருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்திலும்கூட அவற்றைக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார். 5-12-2014 அன்றும், 27-3-2015 அன்றும் இதே மன்றத்தில் ஏகமனதாக அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமல்ல, அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து 55 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து கட்சி பேதங்களையெல்லாம் மறந்து, 28-3-2015 அன்று மாண்புமிகு இந்திய பிரதமர் அவர்களை நேரில் சென்று சந்தித்து, மேகதாதுவில் அணை கட்டக் கூடாது என்று ஒரே குரலில் நாம் வற்புறுத்தியிருக்கிறோம். 8-1-2016 அன்று, மத்திய நீர்வளத் துறை அமைச்சர் தமிழக அரசுக்கு எழுதியிருக்கக்கூடிய கடிதத்தில், மேகதாது அணை குறித்த விரிவான திட்ட அறிக்கை தயார் செய்வதற்கு முன்பு, அந்த அணை தொடர்பான வரைபடத்தைத் தமிழக அரசுக்குக் கொடுத்து, அவர்களுடைய ஒப்புதலையும் பெற வேண்டும் என்று அறிவுறுத்தியிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 25-2-2017 அன்று பிரதமருக்கு எழுதியிருக்கக்கூடிய கடிதத்தில் இதை அவர் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார். இதே நிலையில், தமிழக விவசாயிகளும், தமிழக மக்களும் அதிர்ச்சியடையக்கூடிய வகையில், தற்போது காவேரியாற்றின் குறுக்கே, மேகதாதுவில் புதிய அணை கட்டுவதற்கான Detailed Project Report எனப்படும் விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிக்க மத்திய நீர்வளக் குழுமம் அனுமதி கொடுத்திருக்கிறது. காவேரி ஆற்றைத் தடுத்து, மேலும் புதிய அணை ஒன்றைக் கட்டுவதற்கு, கர்நாடக மாநிலத்திற்கு அனுமதி அளித்திருப்பது, நடுவர் மன்றம் வழங்கிய இறுதித் தீர்ப்பிற்கு எதிராக அமைந்திருக்கிறது. நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பின்மீதான மேல்முறையீடுகளை விசாரித்து, 16-2-

2018 அன்று உச்ச நீதிமன்றம் அளித்த இறுதித் தீர்ப்பிற்கு இது எதிராக அமைந்திருக்கிறது. ஏன் உச்ச நீதிமன்ற இறுதித் தீர்ப்பின் அடிப்படையில், நடுவர் மன்றத் தீர்ப்பைச் செயல்படுத்த 1-6-2018 அன்று அரசிதழில் வெளியிடப்பட்ட திட்டத்திற்கு (scheme) எதிரானது. 5,912 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 66 டி.எம்.சி. அடி காவேரி நீரைத் தேக்கி வைக்கும் அளவிற்கு கொள்ளளவு கொண்ட அணை கட்டுவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. 16-2-2018 அன்று உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில், நடுவர் மன்றம் ஒதுக்கீடு செய்திருக்கக்கூடிய நீரின் அளவு குறையும் விதத்தில் கர்நாடக மாநிலம் காவேரி நீரைத் தேக்கி வைத்துக்கொள்ளக் கூடாது என்று தெளிவாக உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

உச்ச நீதிமன்றம் 18-5-2018 அன்று ஒப்புதலளித்த திட்டம் (Scheme) இந்த நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பின் அடிப்படையில்தான் உருவாக்கப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு சில குளறுபடிகளைச் செய்து, வேண்டுமென்றே தாமதப்படுத்தி, அந்த Scheme-ஐ தேவையான அளவிற்கு வலுவுள்ளதாக அவர்கள் உருவாக்கவில்லை. தமிழகமே கொந்தளித்துப் போராட்டம் நடத்திய நிலையில், மத்திய அரசு இதைப் பற்றி கிஞ்சித்தும் கவலைப்படவில்லை. வலுவான திட்டத்தை உருவாக்க அவர்கள் முன்வரவில்லை. ஆனாலும், நடுவர் மன்றம் அளித்த இறுதித் தீர்ப்பின் அடிப்படை அம்சங்கள், நீரின் அளவு 14.75 டி.எம்.சி. அடி தமிழகத்திற்குக் குறைக்கப்பட்டதுதான்; மற்ற அனைத்துமே உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, கர்நாடக அரசின் புதிய அணை கட்டும் முயற்சி, மேகதாதுவில் அணை கட்ட அளித்த அனுமதி எல்லாம் காவேரி வழக்கில் உச்ச நீதிமன்ற இறுதித் தீர்ப்பிற்கு முற்றிலும் முரணானது, எதிரானது. குறிப்பாக, தமிழகத்தின் கருத்தைக்கூடக் கேட்காமல், மத்திய நீர்வளக் குழுமம் அனுமதி அளித்திருப்பது எதேச்சதிகாரமான போக்கு என்றே நான் திட்டவட்டமாகக் கருதுகிறேன். இந்த இடத்தில்தான் நாம் முக்கியமான இரு விஷயங்களில் கவனமாக இருக்காமல் இருந்து விட்டோமோ என்ற சந்தேகம் என்னுடைய மனதில் ஏற்பட்டிருக்கிறது. ஒன்று, காவேரி மேல்முறையீட்டு வழக்கில், 2453/2007 தமிழக அரசின் இடைக்கால மனு, IA 20, 2014 ஆம் வருடம், நவம்பர் மாதம் 18 ஆம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு, அதில், மேகதாதுவில் அணை கட்ட தடை கோரப்பட்டது. அந்த இடைக்கால மனுமீது ஒரு தடை

உத்தரவைப் பெற்றிருக்க வேண்டும். அப்படிப் பெற்றிருந்தால், இந்த நிலை நிச்சயமாக நமக்கு ஏற்பட்டிருக்காது. ஆனால், கடைசிவரை பெறவில்லை. அதுவும் இல்லையென்றால், காவேரி மேல்முறையீட்டு மனுக்கள்மீது முடிவு வந்த பிறகு, புதியதாக ஒரு வழக்கினை, மேகதாது அணை கட்டக்கூடிய விஷயத்தில் தாக்கல் செய்தாவது நாம் தடை பெற்றிருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால், மத்திய அரசுக்கு மேகதாதுவில் அணை கட்ட அனுமதியைக் கொடுக்கக்கூடிய துணிச்சல் நிச்சயமாக வந்திருக்க வாய்ப்பில்லை. இரு மாநிலங்களின் நல்லுறவிற்கும் குந்தகம் விளைவிக்கக்கூடிய செயலை இந்த அனுமதியின்மூலம் மத்திய அரசே உருவாக்கி இருக்க முடியாது.

பிற்பகல் 4-20

இரண்டாவது, காவேரி மேலாண்மை வாரியம் தொடர்பானது. இந்த வாரியத்தை மத்திய அரசு அமைத்து, அதற்கான அரசிதழ் 1-6-2018 அன்று வெளியிடப்பட்டது. அப்படி அமைக்கப்பட்ட காவேரி மேலாண்மை வாரியம் 9 பேரைக் கொண்டது. தலைவர் ஒருவர்; மத்திய அரசின் சார்பில் நியமிக்கப்படக்கூடிய முழுநேர, பகுதிநேர உறுப்பினர்கள் எத்தனை பேர் என்றால் நான்கு பேர். அதேபோல மாநில அரசு சார்பிலே நியமிக்கப்படக்கூடிய பகுதிநேர உறுப்பினர்கள் நான்கு பேர். இந்த ஒன்பது பேர் கொண்ட குழுவிலே, மாநிலங்களின் சார்பில் முழுநேர உறுப்பினர்கள் யாரும் இல்லை. இதன் தலைவராக இருப்பவர் மத்திய நீர்வளக் குழுமத்தின் தலைவர் பொறுப்பிலே இருக்கக்கூடியவர். ஆகவே, காவேரி மேலாண்மை வாரியத்திற்கு part time தலைவர் இருக்கிறாரே தவிர, முழுநேரத் தலைவர் இன்றுவரை நியமிக்கப்படவில்லை.

ஆறு வாரங்களுக்குள் Scheme வெளியிடப்பட வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. ஆனால், பல்வேறு தாமதங்கள், வாய்தாக்கள் வாங்கி, இறுதியிலே மூன்று மாதங்கள் கழித்து, அதுவும் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டதற்குப் பிறகு, 18-5-2018 அன்று மத்திய அரசு வெளியிட்டது. அந்த Scheme-ஐ அரசிதழில் வெளியிட்டு, காவேரி மேலாண்மை வாரியத்தை அமைக்க 13 நாட்களுக்குமேல் மத்திய அரசு எடுத்துக்கொண்டது. அதேநேரத்தில், காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்பட்டு இன்றோடு 189 நாட்கள் ஆகியிருக்கின்றன. அதாவது, 6 மாத காலம் கடந்து போய் இருக்கிறது. ஆனால், இன்று வரை

2018 டிசம்பர் 6] [திரு. மு.க. ஸ்டாலின்]

காவேரி மேலாண்மை வாரியத்திற்கு முழுநேரத் தலைவரை மத்திய அரசு நியமிக்கவில்லை.

காவேரி மேலாண்மை வாரியத்தின் தலைவரும், மத்திய நீர்வளக் குழுமத்தின் தலைவரும் ஒரே அதிகாரி என்பதால் இன்றைக்கு தமிழகம் முழுமையாக வஞ்சிக்கப்பட்டிருக்கிறது. மத்திய நீர்வளக் குழுமத்தின் முழுநேரத் தலைவர் என்ற பொறுப்பிலே, கர்நாடகாவிற்கு மேகதாது அணை கட்ட விரிவான திட்ட அறிக்கை தயார் செய்வதற்கு அனுமதி வழங்கியிருக்கிறார். அவரே காவேரி மேலாண்மை வாரியத்தின் part time தலைவராக, 'வாரியத்தைக் கேட்காமல் அணையைக் கட்ட முடியாது' என்று பேட்டி அளிக்கிறார். ஆகவே, காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பினைச் செயல்படுத்த அமைக்கப்பட்ட காவேரி மேலாண்மை வாரியத்தையும் மத்திய அரசு முடக்கி வைத்திருக்கிறது. அதுதான் இங்கிருக்கக்கூடிய பிரச்சினை. இப்படி ஓர் ஆபத்தை நாம் ஏன் அனுமதித்தோம்? ஐந்து வருட பதவிக் காலம் வகிக்கக்கூடிய முழுநேரத் தலைவரை காவேரி மேலாண்மை வாரியத்திற்கு நியமிப்பதற்கு கடந்த ஆறு மாதங்களாக தமிழக அரசோ, மாண்புமிகு முதலமைச்சரோ வலியுறுத்தாமல் போனதற்கு என்ன காரணம்? தமிழகத்தின் உயிர்நாடிப் பிரச்சினையான காவேரி விவகாரத்தில் மத்திய அரசு முழுநேரத் தலைவரை நியமிக்காமல் கிடப்பில் போட்டிருக்கக்கூடிய உள்நோக்கம் என்ன? கர்நாடகம் இப்படி மேகதாது அணையைக் கட்டிக்கொள்ளட்டும் என்ற உள்நோக்கமா என்கிற கேள்விதான் எழுகிறது.

மூன்றாவதாக, கர்நாடக முதல்வர் மாண்புமிகு திரு. குமாரசாமி அவர்கள் மே 2018-ல் பொறுப்பேற்கிறார். அவர் பொறுப்பேற்றதற்குப் பிறகு, மேகதாது அணை கட்டுவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய மத்திய அரசிடம் ஜூன் 2018-லேயே அனுமதி கேட்டார். தமிழகத்தின் சார்பில் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மூன்று மாதங்கள் கழித்து 4-9-2018 அன்றுதான் மாண்புமிகு பிரதமருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். பிறகு, 9-9-2018 அன்று முன்னாள் பிரதமர் திரு. தேவகவுடா அவர்கள் அடங்கிய ஒரு குழுவோடு சென்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை கர்நாடக முதல்வர் அவர்கள் சந்தித்தார்கள். மேகதாது அணை கட்ட, மத்திய நீர்வளக் குழுமம் உடனே அனுமதி அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துவிட்டு, வெளியிலே வந்து அவர்

[திரு. மு.க. ஸ்டாலின்] [2018 டிசம்பர் 6

பேட்டியும் தந்திருக்கிறார். அதற்குப் பிறகு 5-10-2018 அன்று மத்திய நீர்வளத் துறை அமைச்சர் மாண்புமிகு நிதின் கட்கரி அவர்களைச் சந்தித்துவிட்டு, பத்திரிகை நிருபர்களிடம், 'மேகதாது அணை கட்ட இன்னும் ஒரு வாரத்தில் மத்திய நீர்வளக் குழுமம் அனுமதி வழங்கும்' என்று வெளிப்படையாகவே கர்நாடக முதல்வர் பேட்டி தந்திருக்கிறார். ஒரு வாரத்தில் அனுமதி என்று சொன்னதும், தமிழக அரசு இதைத் தடுக்கிற முயற்சியில் ஈடுபடாமல் இருந்ததற்கு என்ன காரணம்? தாமதிக்காமல் இதிலே உடனடியாக ஈடுபட்டிருக்க வேண்டும். தமிழகத்திலிருந்து அனைத்துக் கட்சிக் குழுவையோ அல்லது அனைத்துக் கட்சியினுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களையோ அழைத்துக்கொண்டு சென்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்திருக்க வேண்டும். மேகதாது அணை கட்ட, விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு, மத்திய நீர்வளக் குழுமம் அனுமதி அளிக்கக் கூடாது என்று திட்டவட்டமாக கூறியிருக்க வேண்டும்.

பிற்பகல் 4-25

மாண்புமிகு பிரதமர் அவர்களை கர்நாடக முதல்வர் சந்தித்த பிறகு, ஒரு மாதம் கழித்து, தாமதமாகத்தான், அதாவது 8-10-2018 அன்றுதான் மாண்புமிகு பிரதமரிடம் மேகதாது அணைக்கு அனுமதி வழங்கக் கூடாது என்று ஒரு கடிதத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார். அதற்கு முன்பும் கடிதங்கள் எழுதியிருக்கலாம். அதை நான் மறுக்கவில்லை. ஆனால், 'ஒரு வாரத்தில் அனுமதி கிடைக்கும்' என்று கர்நாடக முதல்வர் உறுதியாகக் கூறிய நேரத்தில், நாம் இன்னும் எச்சரிக்கையாக, கவனமாக இருந்திருக்க வேண்டுமா, வேண்டாமா என்பதுதான் என்னுடைய கேள்வி. அதில் தவறிவிட்ட காரணத்தால், இன்றைக்கு மத்திய நீர்வளக் குழுமம், தமிழகத்தின் கருத்துகளைக் கேட்காமலேயே அனுமதியைக் கொடுத்திருக்கிறது. கர்நாடகம், புதிய அணையைக் கட்டக் கூடாது என்று மிகத் தெளிவாக உச்ச நீதிமன்றம் தீர்ப்பிலே குறிப்பிட்டிருக்கிறது. தமிழக விவசாயிகளின் பாசனத் தேவைகளைப் பாதிக்கும் விதத்தில் காவேரி நீரை கர்நாடகம் தேக்கி வைத்துக்கொள்ளக் கூடாது என்றும் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது. காவேரி நதி தேசிய சொத்து. அதை கர்நாடக மாநிலம் உரிமை கொண்டாட முடியாது என்றும் உச்ச நீதிமன்றம் தெளிவாகக் கூறியிருக்கிறது. ஏன், தமிழ்நாட்டிற்கு நடுவர் மன்றம் அளித்துள்ள உரிமையைப் பாதிக்கும் வகையில்

*2018 டிசம்பர் 6*] [திரு. மு.க. ஸ்டாலின்]

*கர்நாடகம் எந்த வகையிலும் காவேரிக்கு சொந்தம் கொண்டாட முடியாது என்றும் உச்ச நீதிமன்றம் அறுதியிட்டுக் கூறியிருக்கிறது. நடுவர் மன்றத் தீர்ப்பைச் செயல்படுத்துவது குறித்த அனைத்து முடிவுகளையும் எடுக்கக்கூடிய அதிகாரம் காவேரி மேலாண்மை வாரியத்திற்கு இருக்கிறது என்று உச்ச நீதிமன்றம் உருவாக்கிய* scheme *தெளிவாகச் சொல்கிறது. ஆனாலும், தமிழகத்தின் மெகா குடிநீர்த் திட்டங்களுக்கு அச்சுறுத்தலாக, தமிழகத்தினுடைய நீர்ப் பாசனத்திற்கு அச்சுறுத்தலாக, தமிழக விவசாயிகளுக்கு அச்சுறுத்தலாக, அவர்களை நிர்கதியில் விட, கர்நாடக மாநில அரசு, மேகதாது அணையைக் கட்டுவதற்காகத் திட்டமிட்டிருக்கிறது. அதற்கு மத்திய அரசும் அனுமதி அளிக்கிறது என்று சொன்னால், இது கூட்டாட்சிக்கு விரோதமான போக்கு. மத்திய, மாநில உறவுகளுக்கு எதிரான போக்கு. ஏன், தமிழகத்தின் உணர்வுகளை, ஏன், இந்த மன்றத்தினுடைய உணர்வுகளை அவமதிக்கக்கூடிய போக்கு. உச்ச நீதிமன்றத்தையே கேள்வி கேட்கக்கூடிய மனப்பான்மையுடன் மத்திய அரசு செயல்படுகிறது. கர்நாடக அரசும் அதற்கு உடந்தையாக இருக்கிறது. எனவே, நான் சொல்ல விரும்புவது, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரைக்கும், கடந்த காலத்திலே ஆளுங்கட்சியினுடைய அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு வழிவிட்டு, அறிவித்திருந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தை இரத்து செய்து, ஒத்துழைப்புத் தந்தவர்கள் நாங்கள் என்பது உங்களுக்குத் தெரியும். இப்பொழுதுகூட பிரச்சினை ஏற்பட்டவுடன், எங்களோடு இருக்கக்கூடிய தோழமைக் கட்சிகளையெல்லாம் ஒருங்கிணைத்து, அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டி, சட்டமன்ற சிறப்புக் கூட்டத்தை உடனடியாகக் கூட்டிட வேண்டுமென்று தீர்மானம் போட்டோம். அதுமட்டுமல்ல, திருச்சியில் கடந்த 4 ஆம் தேதி ஒரு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியிருக்கிறோம். எனவே, எதிர்க்கட்சியாக, தமிழகத்தினுடைய வாழ்வாதாரப் பிரச்சினையிலே, காவேரியைப் பொறுத்தவரைக்கும், திராவிட முன்னேற்றக் கழகம் முழு ஒத்துழைப்பை வழங்கிக் கொண்டிருக்கிறது. ஆளுங்கட்சியைப் பார்த்து நான் கேட்க விரும்புவது, இதை நீங்கள் கூடுதல் பலமாக எடுத்துக்கொண்டு, எக்காரணம் கொண்டும் மேகதாதுவில் அணை கட்ட மத்திய அரசு அனுமதிக்கக் கூடாது என்று நீங்கள் துணிவோடு போராட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இருமுறை இதே மன்றத்திலே நாம் ஏகமனதாக தீர்மானம் போட்டிருக்கிறோம். அதை அவர்கள் மதிக்கவில்லை. தமிழகத்தினுடைய*

[திரு. மு.க. ஸ்டாலின்] [2018 டிசம்பர் 6

உரிமைகளையெல்லாம் அவர்கள் மதிக்கவில்லை என்பதுதான் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. இன்றுகூட நான் சந்தேகப்படுவது, இந்தத் தீர்மானம் போடுகிறோமே, இதை நிறைவேற்ற முடியுமா; இங்கே நிறைவேற்றிவிடலாம்; ஆனால், எந்த எண்ணத்தோடு தீர்மானம் போடுகிறோமோ அந்த எண்ணம் நிறைவேறுமா என்ற சந்தேகம்தான் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தத் தீர்மானத்தை மத்திய அரசிற்குக் கண்டனத்தைத் தெரிவிக்கிற தீர்மானமாக நீங்கள் நிறைவேற்றியிருந்தால், அது முழுமையான தீர்மானமாக இருக்கும் என்பதுதான் என்னுடைய கருத்து. (மேசையைத் தட்டும் ஒலி) இருந்தாலும், தமிழக நலன் கருதி, நீங்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நான் முழு மனதோடு ஆதரிக்கிறேன். ஆதரிக்கிற அதே நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு ஓர் அன்பான வேண்டுகோள். கஜா புயலால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய மக்களுக்கு இன்னமும் உரிய நிவாரணம் கிடைக்காத ஒரு சூழ்நிலை உள்ளது. மத்திய அரசின் பேரிடர் நிதியை இன்னமும் வழங்காத ஒரு நிலை உள்ளது. எனவே, கஜா புயல் நிவாரணப் பணிகள் பற்றி விவாதிப்பதற்கு நாளை வரை சட்டமன்றக் கூட்டத்தை நீட்டித்து, தொடர்ந்து நடத்தி, அதுபற்றி விவாதிக்கிற ஒரு சூழ்நிலையை நீங்கள் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

பிற்பகல் 4-30

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினர் தனித் தீர்மானத்தின்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்றக் கூட்டத் தொடரை உடனடியாகக் கூட்டி விவாதிக்க வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடமும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும் காங்கிரஸ் கட்சியின் சார்பாக வேண்டுகோள் விடுத்தோம். மேலும், எல்லா எதிர்க்கட்சிகளைச் சார்ந்தவர்களும் இந்த வேண்டுகோளை தங்களிடம் வைத்திருந்தார்கள். அதன்

அடிப்படையில் இன்றைக்கு நீங்கள் சட்டமன்றக் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறீர்கள். அதற்காக நான் உங்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவேரி நதிநீரைப் பொறுத்தமட்டில், இந்தப் பிரச்சினை ஏறத்தாழ 40 ஆண்டுகளாக இருந்து வருகிறது. உச்ச நீதிமன்றத்தில் 1990 ஆம் ஆண்டு வழக்கு தொடரப்பட்டு, தொடர்ந்து நீதிமன்றத்திலே வாதாடி நாம் ஒரு தீர்ப்பைப் பெற்றிருக்கிறோம். 2013 ஆம் ஆண்டில்தான் நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு அரசிதழில் வெளியிடப்பட்டது. இதற்குப் பிறகு, காவேரி மேலாண்மை வாரியம் அமைப்பதற்கு எதிராக பாரதிய ஜனதா அரசு, தமிழகத்திற்கு விரோதமாக, தமிழக விவசாயிகளுக்கு விரோதமாக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டது. இறுதியில், உச்ச நீதிமன்ற ஆணையின்படி காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்பட்டது. வாரியம் அமைக்கப்பட்ட பிறகு தமிழகத்தின் உரிமைகள் உச்ச நீதிமன்றத்தின் ஆணையின் அடிப்படையிலே தொடர்ந்து காப்பாற்றப்பட்டு வந்தன.

காவேரி நதிநீரைப் பொறுத்தவரையில், காவேரி, தலைக்காவேரியிலே ஆரம்பித்து, ஏறத்தாழ 800 கிலோ மீட்டர் தூரம் கடந்து, கடைசியில் கடலூர் மாவட்டத்திலே கடலில் கலக்கிறது. இதிலே பெரும் பகுதி தமிழகத்தைச் சேர்ந்த இடம் ஆகும். தமிழகத்தில் 75 சதவிகிதப் பகுதிகளிலே இந்த ஆறு ஓடுகிறது. 1971 ஆம் ஆண்டு மத்திய அரசால் நியமிக்கப்பட்ட உண்மை அறியும் குழு, ஒரு கணக்கை எடுத்திருக்கிறார்கள். அந்தக் கணக்கின்படி தமிழ்நாட்டிலே 28 இலட்சம் ஏக்கர் நிலங்களுக்குத் தண்ணீர் பாயும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதேபோல் கர்நாடக மாநிலத்திலும் 6 இலட்சம் ஹெக்டேர் நிலத்திற்குத் தண்ணீர் பாயும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த வித்தியாசத்தைப் பார்த்தாலே, தமிழகத்திற்கு முழு உரிமை இருக்கிறது; அதிலும் மிகுதியான உரிமை தமிழகத்திற்கு இருக்கிறது என்பது நமக்கு நன்றாகத் தெரியும்.

காவேரியைப் பொறுத்தவரையில், காவேரியிலிருந்து வரக்கூடிய நீர் தமிழகத்திற்கு பற்றாக்குறை நீராகத்தான் தொடர்ந்து இருந்திருக்கிறது. அதன் அடிப்படையில் பார்க்கும்போது, வெள்ளம் அதிகமாக வரும்பொழுது கர்நாடக மாநிலத்தினுடைய கழிவுநீர், தமிழகத்திற்கு வந்து கடலுக்குச் செல்கின்ற நிலையைத்தான் நாம் தொடர்ந்து அனுபவித்து

வருகிறோம். ஆனால், அந்தப் பற்றாக்குறை நீரை நாம் எப்படிப் பெறுவது என்பதுதான் இந்த ஆணையத்தினுடைய நோக்கம். காவேரியைப் பொறுத்தவரையில், அது எப்போதும் பற்றாக்குறை நீர்தான், காவேரி ஒப்பந்தத்தை மீறி, கடந்த காலங்களில் கர்நாடக அரசு எப்படியெல்லாம் தொடர்ந்து முயற்சித்து வந்ததோ, அதே நிலை இப்போதும் நீடித்துக் கொண்டுதான் இருக்கிறது. ஆனால், கர்நாடக மாநிலத்தில் இருக்கக்கூடிய அனைத்துக் கட்சிகளைச் சார்ந்தவர்களும் ஒற்றுமையாகச் செயல்படுகிறார்கள். ஆனால், தமிழகத்தில் அவ்வாறு இல்லை. தமிழகத்திலும் அதேபோல ஒற்றுமையாக இருந்தால்தான், அணை கட்டுவதை நாம் தடுக்க முடியும் என்று நான் கருதுகிறேன்.

*பிற்பகல் 4-35*

இப்போது இந்தச் சிறப்புக் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறீர்கள். ஆனால், இதற்கு முன்பு நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? ஏன் இவ்வளவு காலதாமதம் ஏற்பட்டது? காலதாமதத்திற்குக் காரணம் என்ன? இதைப்பற்றி முன்னரே சிந்தித்திருந்தால், இவ்வளவு பெரிய பாதிப்பு நமக்கு வந்திருக்காது. அந்தப் பாதிப்பைத் தடுக்க வேண்டிய பொறுப்பு நம்முடைய அரசுக்குத்தான் இருக்கிறது. ஆனால், அதை நீங்கள் சரிவரச் செய்யாததால் இந்த நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையைச் சரிசெய்வதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு இங்கே பேசியபோது, "அரசு அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டவில்லை. நாங்கள் எங்களுடன் சேர்ந்த கட்சிகளை இணைத்து, இதுகுறித்துப் பேசி ஒரு நல்ல முடிவெடுத்திருக்கிறோம்" என்று சொன்னார்கள். அரசு செய்யாத வேலையை எதிர்க்கட்சித் தலைவராவது செய்தாரே என்று அவரை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

காவேரி நீரைப் பகிர்ந்துகொள்வதில், பற்றாக்குறையின் காரணமாக பிரச்சினை ஏற்பட்டு வருகிறது. கர்நாடகத்தைப் பொறுத்தவரையில், பெங்களூருவிலிருந்து ஏறத்தாழ 110 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மேகதாதுவில் அணையைக் கட்டுவதற்கு கர்நாடக அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது. இதற்காக கர்நாடக அரசு ஏறத்தாழ 6 ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பதாகத் தெரிவித்திருக்கிறது. அந்த அணை கட்டுவதற்கு 6 ஆயிரம் கோடி ரூபாய் தேவையில்லை என்பது

*2018 டிசம்பர் 6]* *[திரு. கரி. இராமசாமி]*

*எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்து. ஆனால் "ஓர் அணையை அவர்கள் கட்டுகிறார்களா, அல்லது இரண்டு அணைகளைக் கட்டுகிறார்களா?" என்று நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே ஒரு பிரச்சினையைக் கிளப்பினார்கள். அதிலும் நாம் நிச்சயமாக ஏமாந்துவிடக் கூடாது. ஏமாந்துவிடாமல், அங்கே கட்டப்படுவது ஓர் அணையா அல்லது இரண்டு அணைகளா என்பதைத் தெரிந்துகொண்டு அதை எவ்வாறு தடுப்பது என்பது குறித்து அரசு முடிவெடுக்க வேண்டும். (குறுக்கீடுகள்) அணையே கட்டக் கூடாது என்று நீங்கள் சொல்கிறீர்கள். இதைச் சொல்கிற இடத்தில் நாங்கள் இல்லை. நீங்கள்தான் இருக்கிறீர்கள். ஒன்று நீங்கள் செய்யுங்கள். நீங்கள் செய்யவில்லையென்றால், கூடிய விரைவில் நாங்கள் செய்வோம். அதில் நீங்கள் சந்தேகமே பட வேண்டாம். நீங்கள் செய்யுங்கள். நீங்கள் அதை ஒழுங்காகச் செய்வீர்கள் என்று நம்புகிறோம்; நாங்கள் உங்களிடம் இந்தக் கோரிக்கைகளை எல்லாம் வைக்கிறோம். ஆகையால் நீங்கள் செய்யுங்கள். இல்லையென்றால் நாங்கள் செய்ய வேண்டியது வரும். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அண்ணன் அவர்கள், மேகதாதுவில் அணை கட்டுவது குறித்த தீர்மானத்தின்மீது மட்டும் பேசினால் அவர் தப்பித்துக்கொள்வதற்கு வழி இருக்கிறது. மற்ற பிரச்சினைகளைக் கொண்டுவந்தால், ஆரம்ப காலத்திலிருந்து சொல்ல வேண்டி வரும். மாண்புமிகு அம்மா அவர்களால், காவேரிப் பிரச்சினையில், நம்முடைய ஜீவாதார உரிமைகளைக் காப்பாற்றுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தெல்லாம் நாங்கள் இங்கே தெரிவிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். ஏனென்று சொன்னால், காவேரி நடுவர் மன்றத்தினுடைய இறுதித் தீர்ப்பு, 17 ஆண்டுகளுக்குப் பிறகு வந்த தீர்ப்பு. அதற்கு அரசாணை பெற்றுத் தர வேண்டிய இடத்தில் நீங்கள்தான் இருந்தீர்கள். அதை நீங்கள் செய்தீர்களா, செய்யவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)*

*2011 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, உச்ச நீதிமன்றம் சென்று, வாதாடி, போராடி, சட்டப் போராட்டம் நடத்தித்தான், 2013 ஆம்*

ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள், உச்ச நீதிமன்றம் மூலமாக அரசாணையைப் பெற்றுத் தந்தார்கள். நீங்கள் நினைத்திருந்தால் 24 மணி நேரத்தில் அதைப் பெற்றுத் தந்திருக்கலாம். இதையெல்லாம் நாங்கள் தெரிவிக்க வேண்டியது வரும். அதெல்லாம் வேண்டாம். தீர்மானத்தின்மீது மட்டும் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

**திரு. கரி. இராமசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய நீர்வளக் குழுமத்தினுடைய தலைவராக. . . (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது என்னவென்றால், இங்கே இருக்கின்ற பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்கள் அரசியல் பாடம் கற்றுக் கொண்டது பேரறிஞர் அண்ணா அவர்களிடம்தான். (குறுக்கீடு) உங்களைச் சேர்க்கவில்லை. "மத்தியில் யார் ஆட்சி நடத்தினாலும், தேனாகப் பேசுவார்கள்; ஆனால், தேளாகக் கொட்டுவார்கள்" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் 60 ஆண்டுகளுக்கு முன்பாகவே தெரிவித்திருக்கிறார்கள். அதை நாம் இப்போது யோசிக்க வேண்டியதிருக்கிறது.*

*பிற்பகல் 4-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை. திரு. இராமசாமி. . . (குறுக்கீடு)*

**திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியில் யார் ஆட்சி செய்தாலும் தேனாகப் பேசுவார்கள், தேளாகக் கொட்டுவார்கள் என்று சொன்னார்கள். அதனால்தான் எங்கள் தலைவர் அவர்கள் அந்தத் ** என்று சொன்னார்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. கரி. இராமசாமி அவர்களே, நீங்கள் தீர்மானத்தின்மீது பேசி முடியுங்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி படுகையில், மேகதாதுவில் அணை கட்டுவதற்கு அனுமதி கொடுத்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து*

---

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2018 டிசம்பர் 6] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

தீர்மானம் கொண்டு வந்திருக்கிறோம். இதில் ** தீர்மானம் இயற்றுவது என்பதும், உவமை எல்லாம் சொல்வது என்பதும் நன்றாக இருக்காது. எனவே, அதனை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அது வேண்டாம். அது எதற்காக? (குறுக்கீடுகள்) இல்லை. தீர்மானம் வந்துவிட்டது. இதில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வேண்டுமென்கின்ற அளவிற்கு மாற்றுக் கருத்துகளைப் பேசிவிட்டார்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் நிறைய பேசிவிட்டீர்கள். (குறுக்கீடுகள்) அதைத்தான் வேண்டாமென்று நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அதனை நாம் எடுத்துவிடலாம். (குறுக்கீடுகள்) அதில் ஒன்றும் தவறு இல்லை. (குறுக்கீடுகள்) விட்டுவிடுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சொல்லுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய துணை முதல்வர் அவர்கள் இதுசம்பந்தமாக அண்மையில் ஒரு பத்திரிகைக்குப் பேட்டி தருகின்றபோது "இதை நாங்கள் கடுமையாகக் கண்டிக்கிறோம்" என்ற வார்த்தையை அவர் பயன்படுத்தியிருக்கிறார். அதைத்தான் நான் கேட்கிறேன். வேறொன்றும் நான் புதிதாகச் சொல்லிவிடவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. தீர்மானத்தில் அப்படி இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, இதனை கண்டனத் தீர்மானமாக நீங்கள் நிறைவேற்றுங்கள் என்று சொன்னார்கள். அதைத்தான் நான் தனிப்பட்ட முறையில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும் சொன்னேன். ஏற்கெனவே செய்தியாளர்கள் என்னிடத்தில் கேட்டபோது, ஒருங்கிணைப்பாளர் என்ற முறையில் இவ்வாறு அனுமதி கொடுத்ததை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம் என்று சொல்லிவிட்டுச் சென்றேன்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அவர்களே, தீர்மானத்தின்மீது பேசுங்கள்.*

**திரு. கரி. இராமசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய நீர்வளக் குழுமத்தினுடைய ஆணையராக திரு. எஸ். மசூத் உசேன் அவர்கள். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசிய அந்தக் குறிப்பை நான் நீக்கிவிட்டேன். அது வேண்டாம். (குறுக்கீடுகள்) நீங்கள் கண்டனத் தீர்மானம் என்று சொன்னீர்கள், அது மாதிரி நான் அதை* record *செய்ய வேண்டியிருக்கிறது. அதனால்தான் வேண்டாமென்று சொல்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், சொல்லுங்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன உவமையைத்தான் சொன்னேன். அதனை வேறுமாதிரி திருத்தி மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அதைத்தான் நான் சொன்னேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சரி, அதை மட்டும் எடுத்துவிடுகிறேன். நீங்கள் பேசியது இருக்கட்டும். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீர்மானத்திலேயே கொடுத்திருக்கிறோம். 'இம்மாமன்றம் கடும் கண்டனத்தினையும், எதிர்ப்பினையும் தெரிவித்துக்கொள்கின்றது' என்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றோம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

**திரு. கரி. இராமசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய நீர்வளக் குழுமத்திற்கு ஒரு தலைவர் இருக்கிறார். அவரேதான் மேலாண்மை வாரியத்திற்கும் தலைவராக இருக்கிறார். இரண்டுக்கும் ஒருவரே தலைவராக இருக்கிறார். முதல் தீர்ப்பிலே இதற்கு அனுமதி கொடுத்ததும் அவர்தான். இரண்டாவதாக,*

*2018 டிசம்பர் 6*] [*திரு. கரி. இராமசாமி*]

*இனிமேல்தான் இதைப்பற்றி விவாதிக்கப் போகிறோம் என்று சொல்வதும் அவர்தான். இதிலேதான் நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல மத்திய அரசு தேனாகவும் இருக்கிறது, தேளாகவும் இருக்கிறது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அதனை அவரே சொல்லி நீக்கிவிட்டார். (குறுக்கீடுகள்) அவர் சொன்னதை அவரே வேண்டாமென்று சொல்லிவிட்டார்கள். அதனை ஏன் நீங்கள் மீண்டும்* record *செய்கிறீர்கள்?*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்ததை அவர்கள் சொல்லிக்கொண்டே வந்தார்கள். அதைத்தான் "நீங்கள் என்ன செய்துகொண்டிருந்தீர்கள்" என்று எங்களைப் பார்த்து கேள்வி கேட்டீர்கள். அதற்குத்தான் நான் இப்போது உங்களைப் பார்த்து கேள்வி கேட்கிறேன். 2007-ல் வந்த தீர்ப்புக்கு நீங்கள் அரசாணை பெற்றுத் தந்தீர்களா? 2014 வரை ஆட்சியில் இருந்தீர்கள், பெற்றுத் தந்தீர்களா என்று கேட்டபிறகு, அறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன உவமையை நான் சொன்னேன். அண்ணா அவர்கள், 'மத்தியில் எந்தக் கட்சி இருந்தாலும்' என்று சொன்ன உவமையைத்தான் நான் சொன்னேனேயொழிய யாரைப் பற்றியும் நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.*

**திரு. கரி. இராமசாமி:** *இதில்தான் பிரச்சினையே வருகிறது.*

*பிற்பகல் 4-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் தீர்மானத்தில் பேசுங்கள். திரு. இராமசாமி அவர்களே, நேரம் இல்லை. நீங்கள் பேசுங்கள். இன்னும் பேச வேண்டியவர்கள் 2, 3 பேர் இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை இருக்கிறது. சொல்லுங்கள்.*

**திரு. கரி. இராமசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு அமைப்புகளுக்கும் ஒருவர் தலைவராக இருக்கிறாரே! இது எந்தவிதத்திலே நியாயம்? இப்பொழுது மத்திய அரசை ஆளுகின்ற பொறுப்பிலே இருக்கக்கூடிய பாரதிய ஜனதா,***

---

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் தீர்மானத்திலே பேசுங்கள். தேவையில்லாத, அரசியல்ரீதியான கருத்துகளைச் சொன்னால் அதற்கு அவர்களும் ஏதாவது பதிலைச் சொல்ல வேண்டியிருக்கும். (குறுக்கீடு) அதெல்லாம் வேண்டாம். ஒருவரை தனிப்பட்ட முறையில் பேசுவது எதற்கு? அதெல்லாம் தேவையில்லை. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு)*

**திரு. கரி. இராமசாமி:** *பாரதப் பிரதமர் ** (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *என்ன தீர்மானமோ, அந்தத் தீர்மானத்தையொட்டிப் பேசுங்கள். (குறுக்கீடு)*

**திரு. கரி. இராமசாமி:** *மத்திய அரசைப் பொறுத்தமட்டில் ஒரு சரியான முடிவிற்கு வர வேண்டும். அவர்கள் இதிலே அரசியல் இலாபம் தேடக் கூடாது. தமிழகத்திலே ஓர் இடத்திலேகூட அவர்களால் ஜெயிக்க முடியாது என்று அவர்களுக்குத் தெரியும். (குறுக்கீடு) உங்களைச் சொல்லவில்லை. உங்களைச் சொல்லவில்லை. நான், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சொல்லவில்லை. நான் சொல்வது, மத்திய அரசை ஆளுகின்ற பாரதிய ஜனதாவைச் சொல்கின்றேன். அவர்கள் ஓர் இடத்தில்கூட தமிழகத்தில் ஜெயிக்க முடியாது. அதனால் அவர்கள் கர்நாடகத்தில் இலாபம் அடையலாம் என்ற எண்ணத்தில் தமிழக விவசாயிகள் வயிற்றில் அடிக்கிறார்கள். அவர்களைக் காப்பாற்ற நம்முடைய அரசு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மற்றொன்று, இப்பொழுது தொடர்ந்து புயல் அடிக்கிறது. அடித்த புயலால். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இவ்வளவு நேரம் எத்தனை முறை அதைப்பற்றிப் பேசியாகிவிட்டது. நீங்கள் திரும்பவும் அதுகுறித்தே பேசுகிறீர்களே!*

**திரு. கரி. இராமசாமி:** *எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லோரும் சேர்ந்து அதைப்பற்றி விவாதிக்க விரும்புகிறோம். அதையும் இதைப்போல விவாதிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*

*அடுத்தபடியாக, இந்தத் தனித் தீர்மானத்தை காங்கிரஸ் கட்சியின் சார்பாக முழுமனதுடன் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், இன்னும் தவறு செய்தவர்கள்மீது உங்களுடைய கோபப் பார்வை அதிகமாக இருக்க வேண்டும். இல்லையென்றால், அவர்கள்*

---

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

*2018 டிசம்பர் 6*] [*திரு. கரி. இராமசாமி*]

*மேகதாதுவில் நிச்சயமாக அணையைக் கட்டிவிடுவார்கள். நீங்கள் அதைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கையை கூடிய விரைவில் எடுக்க வேண்டும். சட்டரீதியாக நீதிமன்றத்தை நீங்கள் நாட வேண்டும் என்று கேட்டு இந்த வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள். (குறுக்கீடு) சுருக்கமாகத்தான் சொல்வார்.*

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேகதாதுவில் அணை கட்டுவது சம்பந்தமாக முன்மொழிந்திருக்கக்கூடிய அரசினர் தனித் தீர்மானத்தின்மீது, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாகப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*காவேரி நதிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரை, பல்வேறு நிலைகளிலே அனைத்துக் கட்சிகளும் ஒருங்கிணைந்த முறையில் நாம் மிகப் பெரிய போராட்டங்களை எல்லாம் நடத்தி, அதன் பிறகு சென்ற பிப்ரவரி 16 ஆம் தேதி உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியது. அந்தத் தீர்ப்பிலே 15 ஆண்டுகளுக்கு எந்த மாற்றமும் செய்யக் கூடாது; நீர் பங்கீட்டு முறையிலே தமிழ்நாடு, கர்நாடகம், புதுச்சேரி, கேரளா மாநிலங்களுக்கு இடையே ஓர் ஒப்பந்தத்தை அவர்கள் செய்து தந்தார்கள். அதை நாம் எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இருந்த நிலையில், தற்போது நவம்பர் 22 ஆம் தேதி உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு முற்றிலும் மாறாக, தமிழகத்தை வஞ்சிக்கக்கூடிய வகையில், மத்திய நீர்வளக் குழுமம் காவேரியினுடைய கீழ்படுகையாக இருக்கக்கூடிய நமது மாநிலத்தை வஞ்சிக்கக்கூடிய வகையில், ஆடு தாண்டும் பாலம் என்று சொல்லக்கூடிய மேகதாது பகுதியிலே அணை கட்டுவதற்குண்டான வரைபடத்திற்கு அனுமதி வழங்கியிருக்கின்றார்கள். நம்மை வஞ்சித்து இருக்கின்றார்கள். எப்படி அவர்கள் இந்த அனுமதியை வழங்கினார்கள் என்பது நமக்குத் தெரியவில்லை. அவர்கள்* Scheme *என்பதற்கு என்ன அர்த்தம் என்று ஏற்கெனவே கேட்டவர்கள்தான். இப்பொழுது அனுமதி, அதாவது,* permission *என்பதற்குக்கூட அவர்கள் விளக்கம் கேட்கக்கூடும். நமக்கு தண்ணீரை வழங்கக் கூடாது என்று கருதுகிற*

[திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்] [*2018 டிசம்பர் 6*

*கர்நாடக அரசுக்கு, தொடர்ந்து சாதகமான நடவடிக்கைகளை எடுத்து, அவர்களுக்குச் சாதகமான ஒரு சூழ்நிலையை மத்தியிலே ஆளக்கூடிய பாரதிய ஜனதா கட்சி தொடர்ந்து எடுத்து வருகிறது.*

*பிற்பகல் 4-50*

*தஞ்சைத் தரணியின் நெற்களஞ்சியமாக இருக்கக்கூடிய அந்த இடம் பாலைவனமாக மாறிவிடுமோ என்று தினந்தோறும் அங்குள்ள மக்களெல்லாம், விவசாயிகளெல்லாம் அஞ்சிக் கொண்டிருக்கக்கூடிய நேரத்தில், மத்தியில் ஆளக்கூடிய பாரதிய ஜனதா கட்சி தமிழகத்தை வஞ்சிக்கக்கூடிய வகையிலே, இதிலேயும் அவர்கள் மறைமுகமாக ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள். உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பையே அவமதித்திருக்கின்றார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில், சென்ற இரண்டு வருட காலமாக பிரச்சினைகளுக்குள்ளேயே தமிழகம் செல்ல வேண்டும் என்று சொல்லக்கூடிய அளவுக்கு பல்வேறு நிலைகளிலே, 'ஸ்டெர்லைட்' பிரச்சினையாக இருக்கட்டும், இப்பொழுது 'கஜா' புயலாக இருக்கட்டும், எல்லா விஷயங்களிலும் மத்திய ஆட்சி நம்மை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடத்துவதற்குண்டான காரணம் என்ன என்பதைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.*

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

*ஒட்டுமொத்தமாக அனைத்துக் கட்சிகளும், நம்மிடையே இருக்கக்கூடிய வேறுபாடுகளையெல்லாம் களைந்து, அனைத்துக் கட்சிக் கூட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்தார்கள். அதிலே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் தளபதி அவர்களும், மற்றவர்களும் கலந்துகொண்டு அழுத்தம் கொடுக்க வேண்டும், பிரதமரைச் சந்திக்க வேண்டும் என்று தீர்மானம் போட்டோம். அந்தத் தீர்மானம் என்னவாயிற்று, நம்முடைய தீர்மானங்களுக்கு வலு இல்லையா, சட்டமன்றத் தீர்மானத்திற்கு வலு இல்லையா, தமிழகத்தினுடைய எதிர்க்கட்சிகளின் தீர்மானங்களுக்கு வலு இல்லையா என்று பொதுமக்கள் எல்லாம் கேட்கக்கூடிய அளவுக்கு தமிழகம் மிகவும் பின்தங்கிய நிலையிலே சென்று கொண்டிருப்பதை நாம் கவனத்தோடு ஆய்வு செய்ய வேண்டும். ஏனென்று சொன்னால், தமிழகத்திலே 39 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றோம். இப்படியே சென்று கொண்டிருந்தால் மாநில சுயாட்சி கேள்விக்குறியாக்கப்பட்டுவிடும். தீர்மானங்களை*

2018 டிசம்பர் 6] [திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்]

நிறைவேற்றுகின்றோம்; அனைத்துக் கட்சி கூட்டத்திலே ஒருமித்த வகையிலே தீர்மானத்தை நிறைவேற்றி, அவர்களைச் சந்திக்க முடியவில்லை என்று சொன்னால் இதைவிட வெட்கப்படுவதற்கு ஒன்றுமே இல்லை. மேலும், இதிலே நான் அதிகமாகப் பேசுவதற்கு ஒன்றுமில்லை. ஏற்கெனவே தீர்மானத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், அதைத் தொடர்ந்து காங்கிரஸ் சட்டமன்றக் கட்சித் தலைவர் அவர்களும் பல்வேறு தகவல்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். நேற்றைய முன்தினம் அறிவிக்கப்பெற்று, இன்று கூட்டப்பட்ட இந்த அவையிலே நாம் அனைவரும், அனைத்து உறுப்பினர்களும் அவசரமாக இங்கே வந்து, நம்முடைய கவலையைத் தெரிவிக்கக்கூடிய வகையிலே இன்றையதினம் என்பது ஒரு சோகமான தினமாகத்தான் அமைந்திருக்கிறது.

என்னைப் பொறுத்தவரையில், இந்தச் சட்டமன்றக் கூட்டம், தமிழகத்திலே ஆளுமை பொருந்திய தலைவர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய மறைவுக்குப் பிறகு நடக்கக்கூடிய முதல் கூட்டம். அதேபோலவே, நேற்று உங்களுடைய தலைவி அவர்களுக்கு நீங்கள் அஞ்சலி செலுத்தியிருக்கிறீர்கள். நாட்டினுடைய அரசமைப்புச் சட்டத்தைத் தந்த டாக்டர் அம்பேத்கர் அவர்களுடைய நினைவு தினம், அதோடு இந்திய இறையாண்மைக்கு வேட்டு வைக்கக்கூடிய வகையிலே, பல்லாண்டு காலம் இருந்த பாபர் மசூதி இடிக்கப்பட்ட தினமும் இந்த தினம்தான். இந்த துக்க நாளிலே நாமெல்லாம் கூடி தமிழகத்தினுடைய முன்னேற்றத்திற்காக பேசிக்கொண்டிருக்கிறோம். வெறுமனே தீர்மானம் என்று இல்லாமல், மேலும் அழுத்தம் கொடுக்கக்கூடிய வகையிலே, ஓரிரு தினங்களிலே கூட இருக்கின்ற பாராளுமன்றத்தை முற்றுகை செய்யக்கூடிய அளவுக்கு நம்முடைய அழுத்தம் அங்கே இருக்க வேண்டும். கட்சிகளையெல்லாம் மறந்து, அங்கே ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். அப்படியும் அவர்கள் செவிசாய்க்கவில்லையென்று சொன்னால் தமிழகத்தை வஞ்சித்திருக்கக்கூடிய மத்திய அரசாங்கத்திற்குக் கண்டனத்தையும், எதிர்ப்பையும் தெரிவிக்கக்கூடிய வகையிலே, வரிகொடா இயக்கம் போன்ற எச்சரிக்கை நடவடிக்கைகளிலே நாம் ஈடுபட வேண்டும்; தொடர் நடவடிக்கைகளிலே தமிழக அரசு ஈடுபட வேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு, இங்கே தமிழக முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கக்கூடிய அரசினர் தனித் தீர்மானத்தை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக வரவேற்று வழிமொழிகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள்.

**திரு. எம். தமிமுன் அன்சாரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய அவசர நெருக்கடிகளை, மக்களுடைய உணர்வுகளை எல்லாம் கருத்திற்கொண்டு, இந்த மாமன்றத்தை இன்றையதினம் கூட்டியதற்காக முதலிலே என்னுடைய நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இன்றைய நாள் என்பது 'அறிவு ஆசான்' அம்பேத்கர் அவர்களுடைய நினைவு நாள், பாபர் மசூதி இடிக்கப்பட்ட நாள், பாரம்பரியமிக்க 174 நெல் விதைகளை மீட்டெடுத்து நம்முடைய உணவுக் கலாசாரத்தைப் புதுப்பித்த தோழர் நெல் ஜெயராமன் அவர்கள் உயிரிழந்த நாள் என்று துக்கங்கள் நிறைந்த ஒரு நாளிலே தமிழ்நாட்டுக்கு எதிர்காலத்திலே ஒரு துக்கம் வந்துவிடக் கூடாது என்ற நோக்கத்தோடு நாமெல்லாம் கூடியிருக்கின்றோம்.

பிற்பகல் 4-55

மொத்தத்திலே இது ஒரு குளிர்காலம். ஆனால், வடக்கிலிருந்து வரக்கூடிய வாடைக் காற்று நம்முடைய உடம்பிற்கு ஒத்துக்கொள்வதில்லை. எனவேதான், தமிழ்நாட்டு மக்களினுடைய நலனைக் காக்கும் விதத்திலே நாம் இங்கே கூடியிருக்கின்றோம். சுருக்கமாகப் பேச வேண்டும் என்று பணித்த காரணத்தினாலே ஒரேயொரு செய்தியை மட்டும் மேற்கோள் காட்டிவிட்டு என்னுடைய உரையை நான் நிறைவு செய்ய விரும்புகின்றேன்.

திபெத்தில் தொடங்கி, சீனாவின் வழியாக இந்தியாவைக் கடந்து, பங்களாதேஷ் நோக்கிப் பாய்கிறது பிரம்மபுத்திரா நதி. அந்த நதியிலே கட்டுமானங்களை சீனா உருவாக்குகின்றபோதெல்லாம் நம்முடைய இந்திய தேசம், ஒட்டுமொத்த இந்திய மக்களினுடைய நலனைக் கருதி, வலிமையான எதிர்ப்புகளைத் தொடர்ச்சியாகத் தெரிவித்து விடுகிறது. எப்படி பிரம்மபுத்திரா நதியின் குறுக்கே அணைகளோ அல்லது நீர் மின் நிலையங்களோ கட்டுகின்றபொழுது, இந்தியாவினுடைய உரிமை பாதிக்கப்படக் கூடாது என்ற அக்கறையோடு மத்திய அரசு தன்னுடைய கருத்தை, கண்டனத்தை சீனாவுக்குப் பதிவு செய்கின்றதோ

*2018 டிசம்பர் 6*] [திரு. எம். தமிமுன் அன்சாரி]

அதேநிலையில், தமிழக மக்களுடைய உணர்வுகளையும் அவர்கள் புரிந்து நடந்துகொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்தின் சாராம்சமாகும்.

காவேரி நம்முடைய பிறப்புரிமை, காவேரி நம்முடைய வாழ்வுரிமை, ஒட்டுமொத்தத் தென்னிந்தியாவிற்கும் சோறு போடக்கூடிய தஞ்சை சமவெளி பாலைவனமாக மாறிவிடக் கூடாது என்ற அக்கறையில் நாம் கூடியிருக்கின்றோம். எனவே, காவேரி தொடங்கக்கூடிய குடகு முதல், அதன் கடைமடைப் பகுதியான காவேரி டெல்டா வரை இதனுடைய வழித்தடங்கள் எங்கிலும் ஒரு செங்கல்லைக்கூட நகர்த்துவதற்கு எந்தவிதத்திலும் அனுமதிக்கக் கூடாது. அதற்கு காவேரி மேலாண்மை வாரியம் வலிமையான முடிவுகளை எடுக்க வேண்டும். ஏனென்று சொன்னால், இப்பொழுது நடக்கக்கூடிய நிகழ்வுகளைப் பார்க்கின்றபொழுது, இந்த வாரியத்திற்குப் பல் இருக்கின்றதா, இல்லையா என்ற ஒரு கேள்வியும், ஐயமும் நமக்கு எழுந்திருக்கின்றது. எனவே, காவேரி மேலாண்மை வாரியம் முழுமையான ஒரு தலைவரைக் கொண்டு முழுமையாக இயங்கிடவும், பாரபட்சமின்றி நடவடிக்கை எடுத்திடவும், மத்திய அரசு துணை நிற்க வேண்டும். மத்திய அரசு கர்நாடகாவினுடைய அரசியல் இலாபங்களைக் கருத்திலே கொண்டு காய் நகர்த்துகிறதோ என்ற காங்கிரஸ் சட்டமன்றக் கட்சித் தலைவருடைய கருத்திலே எனக்கும் உடன்பாடு உண்டு. சில அரசியலை சில அரசியலால்தான் முறியடிக்க முடியும். அத்தகைய பார்வையோடு, அனைத்துக் கட்சி நண்பர்களும் ஒரே சிந்தனையோடு இங்கே திரண்டிருக்கின்றோம்.

தமிழ்நாட்டினுடைய உரிமைகளைக் காக்க, தமிழர்களினுடைய நெஞ்சம் குளிரும் வகையில், ஒட்டுமொத்த அவை உறுப்பினர்களுடைய ஆதரவோடு இந்தத் தீர்மானத்தை நாம் நிறைவேற்றிட வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தை நானும் ஆதரித்து, வாழ்த்தி அமர்கிறேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால் நூற்றாண்டுக்கும் மேலாக மிகக் கடுமையான சட்டப் போராட்டங்களை நடத்தி, ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக

[திரு. உ. தனியரசு] [2018 டிசம்பர் 6

தமிழ்நாட்டு மக்களினுடைய வாழ்வாதார நிகழ்வாக, வாழ்வாதாரமாக, வற்றாத ஜீவநதியாக இருந்த காவேரி ஆற்று நீரின் உரிமையைத் தட்டிப் பறிக்கிற வகையிலே கர்நாடக அரசு தொடர்ந்து ஆற்றின் குறுக்கே அணைகளைக் கட்ட திட்டமிட்டுள்ளது. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக தாய்த் தமிழ்ச் சமூகம் அனுபவித்து வந்த ஆற்று நீர் உரிமை படிப்படியாகக் குறைக்கப்பட்டு இப்பொழுது தமிழ்நாட்டிற்குத் தேவையான குடிநீர், விவசாயம், தொழில் உள்ளிட்ட பல்வேறு வகைகளிலே நமக்குரிய காவேரியினுடைய ஆற்றுநீர்ப் பங்கு கிடைக்கப்பெறாத சூழ்நிலையில் மிகக் கடுமையான போராட்டங்களை நடத்தி, நடுவர் மன்றத்தை அமைத்து, அதை அரசிதழிலே வெளியிடச் செய்து, அதன்பிறகு வாரியத்திற்கு தலைவர்களை நியமித்து, இப்படி, பல்வேறு போராட்டங்களை காவேரி நீரைப் பெறுவதற்கு நாம் நிகழ்த்தி வருகிறோம். இந்நிலையில், மீண்டும் வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதைப் போல கர்நாடக அரசு காவேரி ஆற்றின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கையை தயாரிப்பதற்கான அனுமதியை மத்திய அரசிடம் கோரியபொழுது, மத்திய அரசின் நீர்வளக் குழுமம் அதற்கு அனுமதி தந்திருப்பது மிகுந்த கண்டனத்திற்குரியது, வேதனைக்குரியது, வருத்தத்திற்குரியது. ஏழு கோடி தமிழ்ச் சமூகத்தினுடைய உணர்வுபூர்வமான பிரச்சினை மட்டுமல்ல, இது தமிழ்நாட்டு மக்களினுடைய வாழ்வாதாரப் பிரச்சினை. காவேரி ஆற்றுநீர் உரிமை மட்டுமல்ல, தமிழ்நாட்டினுடைய எந்த உரிமையையும் உலகத்தில் எவரொருவரும் தட்டிப் பறிக்க முடியாத அளவிற்கு, தாய்த் தமிழ்ச் சமூகத்தை உயிருக்குயிராக நேசித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மக்கள் நல அரசு, காவேரியினுடைய ஆற்றுநீரில் ஒரு சொட்டைக்கூட கர்நாடக அரசோ, வேறு எந்த அரசாக இருந்தாலும் தட்டிப் பறிக்க முடியாத அளவிற்கு மிகக் கடுமையான சட்டப் போராட்டங்களை நடத்தி, அரசியல் வழியில் அறவழிப் போராட்டங்களை நடத்தி, நம்முடைய உரிமைகளைத் தொடர்ந்து பாதுகாத்து வருகிறது. அதனுடைய அங்கமாக, இப்பொழுது மேகதாதுவிலே கர்நாடக அரசு அணை கட்டுவதற்கு முதல் முயற்சியாக எத்தனித்தபொழுதே விழித்துக்கொண்டு, தமிழ்நாட்டு மக்களின் பேரன்பைப் பெற்றிருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மக்கள் நல்லாட்சியை தலைமையேற்று நடத்துகிற மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் கொண்டு வந்த இந்த அரசினர் தனித் தீர்மானத்தை

*கட்சி பாகுபாடில்லாமல், கருத்து வேறுபாடுகள் இல்லாமல் வரவேற்கிறோம். எதிர்க்கட்சித் தலைவர் இதை கோரிக்கையாக வைத்தபொழுது, உடனடியாக அரசு சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி, உலகம் முழுவதும் பரவி வாழ்கிற ஒட்டுமொத்த 7 கோடி தமிழ்ச் சமூகத்தின் உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற வகையிலே மத்திய பா.ஜ.க.வின் மோடி அவர்களுடைய அரசு கர்நாடகாவிலே மேகதாதுவில் அணை கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு அனுமதி தந்ததைக் கண்டித்து, அதனை எதிர்க்கிற வகையிலே இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அணை கட்டுவதற்கு இனியும் அனுமதிக்கக் கூடாது என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்த மாண்புமிகு முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய இந்த நல்லரசை நான் மனதார வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். நன்றி, வணக்கம்.*

*பிற்பகல் 5-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. டிடிவி தினகரன் அவர்கள்.*

**திரு. டிடிவி தினகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் இந்தத் தனித் தீர்மானத்தை நானும் ஆதரிக்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *தமிழ்நாட்டின் உரிமைகளை மீட்டெடுக்கும் வகையிலும், ஒட்டுமொத்தத் தமிழ் மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையிலும், மத்திய அரசை வலியுறுத்தி வரலாற்றுச் சிறப்புமிக்க பல்வேறு தீர்மானங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த மாமன்றத்தில் முன்மொழிந்து, அவற்றை ஒருமனதாக நிறைவேற்றியிருக்கிறார்கள்.*

*மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மேகதாது அணைப் பிரச்சினை குறித்து வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை இங்கே முன்மொழிந்திருக்கிறார்கள். அதன்மீது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றும் பிற கட்சிகளைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களும் தெரிவித்த கருத்துகளோடு என்னுடைய உணர்வுகளையும் இணைத்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாகாணத்திற்கும் மைசூர் சமஸ்தானத்திற்கும் இடையே 1892 மற்றும் 1924 ஆம் ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் காவேரி நதிநீரில் தமிழ்நாட்டிற்குள்ள உரிமையைத் தெளிவாக்குகின்றன. காவேரி நதிநீரில் கீழ் பாசன மாநிலம் என்ற அடிப்படையில் தமிழ்நாட்டிற்கு அதிக உரிமை உள்ளது. காவேரி நதிநீர் டெல்டா மாவட்ட மக்களின் வாழ்வாதாரமாகவும் தமிழ்நாட்டிலுள்ள 20-க்கும் மேற்பட்ட மாவட்டங்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் நீராதாரமாகவும் விளங்குகிறது. இருப்பினும், காவேரி நதிநீர் ஒப்பந்த ஷரத்துகளை மீறும் வகையில், 1960-களின் பின்பகுதியிலும், 1970-களின் தொடக்கத்திலும் பல்வேறு அணைகளைக் கட்ட கர்நாடகம் நடவடிக்கை எடுத்தது. 1901 ஆம் ஆண்டில் 3.101 இலட்சம் ஏக்கர் என்ற அளவில் இருந்த விவசாய நிலங்களின் பரப்பு ஹேமாவதி, கபினி, ஹாரங்கி அணைகள் கட்டிய பிறகு 11.20 இலட்சம் ஏக்கராக உயர்ந்து, அதன் பிறகு 2001 ஆம் ஆண்டில் 14.10 இலட்சம் ஏக்கராக மேலும் உயர்ந்தது. எந்த ஒப்புதலும் இல்லாமல் கர்நாடகாவில் உள்ள காவேரி நீர்ப் படுகையிலிருந்து பல்வேறு வகைகளில் நீரைப் பயன்படுத்தி, பாசனப் பரப்பினை சுமார் 27 இலட்சம் ஏக்கர் என்ற அளவிற்கு கர்நாடகா உயர்த்தியுள்ளது. ஆனால், காவேரி நடுவர் மன்றம் தமிழ்நாட்டின் வலிமையான வாதத்தினை ஏற்றுக்கொண்டு, கர்நாடகாவிலுள்ள காவேரி படுகை பாசனப் பரப்பை 18.85 இலட்சம் ஏக்கராக நிர்ணயம் செய்தது. இதனை உச்ச நீதிமன்றமும் உறுதி செய்தது. ஆனால், இந்த உத்தரவினை மீறி, கர்நாடகா பாசனப் பரப்பை அதிகரித்துக் கொண்டே சென்றது. இதுதொடர்பாகவும், கர்நாடகா காவேரி நீரைத் திறந்துவிடாத காரணத்தினாலும், தமிழ்நாட்டிற்கு ஏற்பட்ட நஷ்டத்திற்கு ஈடு செய்திடவும், 2013 ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் 2,479 கோடி ரூபாய் நஷ்டஈடு கோரி வழக்கு தொடர்ந்தார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

தமிழ்நாடு மற்றும் கர்நாடக மாநிலங்களுக்கிடையே ஏற்பட்ட காவேரி நதிநீர்ப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர 1986 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தலைமையிலான அரசு 1956 ஆம் ஆண்டைய மாநிலங்களுக்கிடையேயான நதிநீர் தாவா சட்டத்தின்படி ஒரு நடுவர் மன்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டது. ஆனால், மத்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

*2018 டிசம்பர் 6*] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

இப்பிரச்சினை தொடர்பாக, தமிழ்நாடு காவேரி நீர்ப்பாசன விளைபொருட்கள் விவசாய நல உரிமைப் பாதுகாப்புச் சங்கத்தினர் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தொடுத்தனர். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் உத்தரவின்பேரில் தமிழ்நாடு அரசும் தன்னை இவ்வழக்கில் இணைத்துக் கொண்டது. இவ்வழக்கினை விசாரித்த உச்ச நீதிமன்றம் காவேரி பிரச்சினைக்குத் தீர்வுகாண ஒரு நடுவர் மன்றத்தை ஏற்படுத்துமாறு *1990* ஆம் ஆண்டில் உத்தரவு பிறப்பித்து, *1986* ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு அரசால் அனுப்பப்பட்ட கடிதத்திற்கு உயிரூட்டும் வகையில், அக்கடிதம் மத்திய அரசு வெளியிட்ட அறிவிக்கையில் இடம் பெற்று காவேரி நடுவர் மன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

பிற்பகல் *5-05*

*25-6-1991* அன்று காவேரி நடுவர் மன்றம் ஓர் இடைக்கால ஆணையைப் பிறப்பித்தது. இதில் மேட்டூர் அணைக்கு *205* டி.எம்.சி. அடி நீர் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், கர்நாடகம் தனது நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீரைத் திறந்து விட வேண்டுமென ஆணையிட்டது. மேலும், மாதாந்திர மற்றும் வாராந்திர அடிப்படையில் நீர் விடுவிக்கப்பட வேண்டும் என்றும், இறுதித் தீர்ப்பு அளிக்கப்படும் வரையில், இந்த இடைக்கால ஆணை நடைமுறையில் இருக்கும் என்றும், அந்த இடைக்கால ஆணையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த இடைக்கால ஆணைக்கு எதிராக அவசரச் சட்டம் ஒன்றை கர்நாடக அரசு இயற்றியது. இதுகுறித்து உச்ச நீதிமன்றம் அதன் கருத்தை அளிக்குமாறு மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் கோரினார்கள். இதனை உச்ச நீதிமன்றம் விசாரித்தபோது, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு எடுத்துரைத்த திறமையான வாதங்களின் அடிப்படையில், காவேரி நடுவர் மன்றம் பிறப்பித்த இடைக்கால ஆணை செல்லும் என்றும், அது மத்திய அரசிதழில் வெளியிடப்பட வேண்டுமென்றும், கர்நாடக அரசு இயற்றிய சட்டம் செல்லாது என்றும் *22-11-1991* அன்று தனது கருத்தைத் தெரிவித்தது. இதன் அடிப்படையில், *10-12-1991* அன்று காவேரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை மத்திய அரசு தனது அரசிதழில் வெளியிட்டது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உறுதியான நடவடிக்கையின் காரணமாகவே,

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 டிசம்பர் 6

இந்த இடைக்கால ஆணை மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டு, காவேரியில் தமிழ்நாட்டின் உரிமை நிலைநாட்டப்பட்டது.

மத்திய அரசிதழில் இந்த இடைக்கால ஆணை வெளியிடப்பட்டாலும், அதனைச் செயல்படுத்துவதற்கான அமைப்பை ஏற்படுத்தாத காரணத்தினால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, 1992 ஆம் ஆண்டு ஒரு சிவில் வழக்கை உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு தாக்கல் செய்தது. 11-8-1998 அன்று மத்திய அரசு காவேரி நதிநீர் ஆணையம் மற்றும் காவேரி கண்காணிப்புக் குழு என்ற இரு அமைப்புகளை ஏற்படுத்தியது. இந்த அமைப்புகளால் தமிழ்நாட்டிற்குப் பயன் ஏதும் கிடைக்கவில்லை.

இதன்பிறகு, காவேரி நடுவர் மன்றம், தனது இறுதி ஆணையை 5-2-2007 அன்று பிறப்பித்தது. காவேரியின் மொத்த நீர்வளம் 740 டி.எம்.சி. அடி நீர் என வரையறுத்து, அதில், தமிழ்நாட்டிற்கு 419 டி.எம்.சி. அடி நீரும், கர்நாடகாவிற்கு 270 டி.எம்.சி. அடி நீரும், கேரளாவிற்கு 30 டி.எம்.சி. அடி நீரும், புதுச்சேரிக்கு 7 டி.எம்.சி. அடி நீரும், தவிர்க்க முடியாத உபரி 4 டி.எம்.சி. அடி நீர் எனவும், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக 10 டி.எம்.சி. அடி நீர் எனவும், மொத்தம் 740 டி.எம்.சி. அடி நீரை காவேரி நடுவர் மன்றம் ஒதுக்கீடு செய்தது. இந்த இறுதி ஆணையை முறையாகச் செயல்படுத்த, காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைக்கவும் பரிந்துரை செய்தது.

காவேரி படுகை ஒரு பற்றாக்குறை படுகையாகும். காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணைப்படி, நீர்த்தேக்கங்களில் நீரைத் தேக்கி வைக்கவும், அவற்றிலிருந்து நீரை விடுவிப்பதற்கும் தற்போது இயங்கிவரும் அணைகளே போதுமானதாக உள்ளன என காவேரி நடுவர் மன்றம் அதன் இறுதி ஆணையில் குறிப்பிட்டுள்ளது. மேலும், எந்தவொரு திட்டத்தினையும் செயல்படுத்த கொள்கை அளவில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும் முன்னர், கீழ் பாசன மாநிலங்களின் ஒப்புதலைப் பெற வேண்டுமென அதில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கர்நாடக அரசு, சிவசமுத்திரம் ஆற்றுப்போக்கு நீர் மின் திட்டம் மற்றும் மேகதாது நீர் மின் திட்டத்தைத் தன்னிச்சையாக செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்வதாக நாளேடுகளில்

2018 டிசம்பர் 6] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

செய்திகள் வந்ததன் அடிப்படையில், கர்நாடகம் தன்னிச்சையாக இந்த இரு மின் திட்டங்களையும் எடுத்துக்கொள்ளக் கூடாது என்று தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் ஓர் இடைக்கால மனுவைத் தாக்கல் செய்தது.

2011 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின், 14-6-2011 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை புது தில்லியில் சந்தித்து, காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிட வேண்டுமென்றும், இந்த ஆணையைச் செயல்படுத்தும் வகையில், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைக்க வேண்டுமென்றும் வலியுறுத்தினார்கள். அதன்பின்னர், கடிதங்களின் வாயிலாக இதனை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடர்ந்து வற்புறுத்தியும் மத்திய அரசு செவிசாய்க்கவில்லை.

கர்நாடக அரசு, தன்னிச்சையாக சிவசமுத்திரம் மற்றும் மேகதாது நீர் மின் திட்டங்களைச் செயல்படுத்தப் போவதாக பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தபோது, தமிழ்நாட்டின் இசைவு பெறாமல் கர்நாடக அரசு புதிய அணையைக் கட்ட இயலாது என்றும், அவ்வாறு கர்நாடக அரசு முயற்சிக்குமேயானால் தமிழ்நாடு அதனை அனுமதிக்காது என்றும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 30-3-2012 அன்று இம்மாமன்றத்தில் உறுதிபடத் தெரிவித்தார்கள்.

பின்னர், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த அறிவார்ந்த நடவடிக்கைகளின் காரணமாக, உச்ச நீதிமன்றத்தின் தலையீட்டால், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை 19-2-2013 அன்று மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டு, காவேரி பிரச்சினையில் தமிழ்நாட்டின் உரிமை நிலைநாட்டப்பட்டது.

காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை மத்திய அரசிதழில் வெளியிடப்பட்ட போதிலும், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை மத்திய அரசு அமைக்கவில்லை. எனவே, இந்த இரு அமைப்புகளையும் உடனடியாக அமைக்க மத்திய அரசுக்கு ஆணையிடக் கோரி, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி 18-3-2013 அன்று தமிழ்நாடு அரசு, உச்ச நீதிமன்றத்தில் இடைக்கால மனு ஒன்றைத் தாக்கல் செய்தது. 10-5-2013 அன்று இந்த மனுவினை

விசாரித்த உச்ச நீதிமன்றம், காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படும் வரையில், 19-2-2013 அன்று மத்திய அரசிதழில் வெளியிடப்பட்ட நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை செயல்படுத்த ஒரு தற்காலிக ஏற்பாடாக மத்திய நீர் ஆதார அமைச்சக செயலாளரின் தலைமையில், மாநில தலைமைச் செயலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட காவேரி மேற்பார்வைக் குழு ஒன்றை அமைக்க ஆணையிட்டது. இந்த ஆணையின்படி, ஒரு மேற்பார்வைக் குழுவினை மத்திய அரசு அமைத்தது.

பிற்பகல் 5-10

மாநில அரசுகளால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுக்கள் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த நிலையில், கர்நாடக அரசு, காவேரி நீரவாரி நிகமம் என்ற அமைப்பின் வாயிலாக, மேகதாது நீர் மின் திட்டம் மற்றும் வேறுபல திட்டங்களை எடுத்துக்கொள்வதாக பத்திரிகையில் செய்தி வந்தது. இதனையடுத்து, இத்திட்டங்களை தமிழ்நாடு அரசின் முன்னனுமதியின்றி எடுத்துக்கொள்ள வேண்டாமென கர்நாடகத்திற்கு அறிவுரை வழங்கவும், காவேரி மேலாண்மை வாரியம் நிரந்தரமாக அமைக்கப்பட்டு செயல்படும் வரை கர்நாடகத்தின் எந்தத் திட்டத்திற்கும் அனுமதி வழங்குவதை நிறுத்தி வைக்கும்படி மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்திற்கு அறிவுரை வழங்கவும் கோரி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை 2-9-2013 மற்றும் 3-9-2013 அன்று கடிதங்கள் வாயிலாக வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்கள். இதைத் தொடர்ந்து கர்நாடக தலைமைச் செயலாளர் அவர்களுக்கும், மத்திய நீர் ஆதார அமைச்சக செயலாளர் அவர்களுக்கும், முறையே 6-9-2013 மற்றும் 17-9-2013 அன்று கடிதங்கள் அனுப்பப்பட்டன.

சிவசமுத்திரம் மற்றும் மேகதாது திட்டங்களுக்கான விரிவான திட்ட அறிக்கை ஏதும் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒப்புதல் கோரி மத்திய நீர்வளக் குழுமத்திற்கு வரவில்லை எனவும், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், மத்திய நீர் ஆதார அமைச்சகம் 7-10-2013 அன்று அனுப்பிய பதில் கடிதத்தில் தெரிவித்தது. மீண்டும் 9-10-2013 அன்று, மேல்முறையீட்டு மனுக்களுக்கு தீர்வு

*2018 டிசம்பர் 6*] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

காணும் வரை இத்திட்டங்களை மேற்கொள்ளாது இருக்கும்படி கர்நாடகத்திற்கு அறிவுரை வழங்கக் கோரி மத்திய அரசுக்குக் கடிதம் அனுப்பப்பட்டது.

காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவைதான் தமிழ்நாட்டிற்கு மாதாந்திர அடிப்படையில் தண்ணீர் கிடைக்க நிரந்தர ஏற்பாடாக இருக்கும் என்பதால், காவேரி மேலாண்மை வாரியத்தை உடனடியாக அமைக்க வேண்டுமென வலியுறுத்தி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 3-6-2014 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் கோரிக்கை மனுவினை நேரில் அளித்து, விரிவாக எடுத்துரைத்தார்கள்.

கர்நாடக அரசு, நீர் மின் திட்டங்கள் பற்றி ஏதும் தெரிவிக்காமல், குடிநீர்த் திட்டம் என்ற போர்வையில் மேகதாது என்னும் இடத்தில் புதிதாக இரண்டு அணைகள் கட்டவுள்ளதாகவும், இதற்கென தொழில்நுட்ப சாத்தியக்கூறு அறிக்கை தயார் செய்வதற்காக “விருப்பம் கோரும் அறிவிப்பை” (Expression of interest) கோரியுள்ளது எனச் செய்திகள் வந்ததையடுத்து, 12-11-2014 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் இப்பிரச்சினையில் தலையிட்டு, கர்நாடக அரசின் இத்தகைய நடவடிக்கையை நிறுத்தி வைக்கவும் மற்றும் எந்தவொரு பாசன, நீர் மின், நீரேற்றுப் பாசனத் திட்டங்கள் மற்றும் குடிநீர் வழங்கல் என்ற போர்வையில் எந்தவொரு திட்டத்தையும் தமிழ்நாட்டின் இசைவு பெறாமல் கர்நாடக அரசு எடுத்துக்கொள்ளக் கூடாது என கர்நாடக அரசிற்கு அறிவுரை வழங்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. மேலும், கர்நாடக அரசின் எந்தவொரு திட்டத்திற்கும் மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் மற்றும் நீர் ஆதார அமைச்சகம் தமிழ்நாட்டின் இசைவு பெறாமல் ஒப்புதல் அளிக்கக் கூடாது என அந்த அமைச்சகங்களுக்கு அறிவுறுத்தும்படி அக்கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டது.

கர்நாடக அரசு, இரண்டு அணைகள் கட்டக் கோரியுள்ள தொழில்நுட்ப ஆய்விற்கான விருப்பம் கோரும் அறிவிப்பை திரும்பப் பெற வேண்டுமெனவும், காவேரி படுகைப் பகுதியில் காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையில் குறிப்பிட்டுள்ள திட்டங்களுக்கு மாறாக கர்நாடகம் இவ்விரு அணைகளைக் கட்டும் பணிகளையோ அல்லது வேறு எந்தவொரு புதிய திட்டங்களையோ

மேற்கொள்ளக் கூடாது எனவும், காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படும் வரையிலும் மற்றும் உச்ச நீதிமன்றத்திலுள்ள வழக்குகள் முடிவுக்கு வரும் வரையிலும் தற்போதைய நிலையே தொடர வேண்டும் என்றும் ஆணை வழங்குமாறு மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு அரசு 18-11-2014 அன்று உச்ச நீதிமன்றத்தில் இடைக்கால மனு ஒன்றைத் தாக்கல் செய்தது.

கர்நாடக அரசு, அதன் 18-11-2014 ஆம் நாளிட்ட கடிதத்தில், ஏற்கெனவே நிலுவையிலுள்ள இடைக்கால மனுவில் உச்ச நீதிமன்றத்திற்குத் தெரிவிக்காமல் இந்தத் திட்டத்தை நிறைவேற்றப் போவதில்லை என்று தமிழ்நாடு அரசுக்குத் தெரிவித்தது.

கர்நாடக அரசு தன்னிச்சையாக மேற்கொள்ளும் மேற்கண்ட திட்டங்களைத் தடுத்து நிறுத்தும்பொருட்டு, 5-12-2014 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, உரிய நடவடிக்கைக்காக மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. கர்நாடக அரசு மேற்கொள்ளும் எந்தத் திட்டங்களுக்கும் தமிழ்நாடு அரசின் கருத்துகளைப் பெறாமல் அனுமதி வழங்கக் கூடாது என்று வலியுறுத்தி, 5-1-2015 அன்றும் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்திற்குக் கடிதம் அனுப்பப்பட்டது. மேலும், கர்நாடக அரசு, அதன் 2015-2016 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், மேகதாதுவில் அணை கட்டும் திட்டத்திற்காக ஒரு விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதை எடுத்துரைத்து, 21-3-2015 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதப்பட்டது. இக்கடிதத்தில், கர்நாடக அரசின் தன்னிச்சையான செயல் காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணைக்கு முற்றிலும் முரணானது எனவும்,அதனால் தமிழ்நாட்டுக்கு வரக்கூடிய நீர் வரத்து பாதிப்படையும் என்பதையும் தெரிவித்து, சட்ட விரோதமாக மேகதாதுவில் அணைகள் கட்டும் திட்டம் மற்றும் வேறு எந்த ஒரு திட்டத்தையும் தமிழக அரசின் ஒப்புதல் இல்லாமல் கர்நாடக அரசு செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளக் கூடாது என அறிவுரை வழங்குமாறு வலியுறுத்தப்பட்டது.

பிற்பகல் 5-15

மேலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும்

2018 டிசம்பர் 6] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

குழு ஆகியவற்றை மத்திய அரசு அமைக்க வேண்டுமென பல முறை வலியுறுத்திக் கேட்டுக்கொண்டபோதிலும், அத்தகைய அமைப்புகள் ஏற்படுத்தப்படாமல் இருப்பது வருத்தத்தை அளிக்கிறது எனத் தெரிவித்து, அவ்வமைப்புகளை காலம் தாழ்த்தாமல் மத்திய நீர்வள ஆதார அமைச்சகம் அமைக்க அறிவுரை வழங்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

இம்மாமன்றம் ஏற்கெனவே 5-12-2014 அன்று நிறைவேற்றிய தீர்மானத்திற்கும், தமிழ்நாடு அரசு மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்திக் கேட்டுக்கொண்டதற்கும் எவ்விதப் பதிலும் வரப்பெறாத நிலையில், கர்நாடக அரசால் மேகதாதுவில் அணை கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க 25 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளதைக் குறிப்பிட்டு, தமிழ்நாடு அரசால் ஏற்கெனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை உடனடியாக விசாரணைக்கு எடுத்துக்கொண்டு ஆணை பிறப்பிக்க 26-3-2015 அன்று உச்ச நீதிமன்றத்தில் கோரப்பட்டது.

இந்நிலையில், கர்நாடக அரசு மேகதாதுவில் அணை கட்டுவது குறித்து 27-3-2015 அன்று இம்மாமன்றம் விவாதித்து, மேகதாதுவில் புதிய அணை கட்ட விரிவான திட்ட அறிக்கை கர்நாடகத்தால் தயாரிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு உரிய நடவடிக்கையை மத்திய அரசு உடனடியாக எடுக்க வேண்டுமென்றும்; காவேரி மேலாண்மை வாரியம் செயலாக்கத்திற்கு வரும் வரையிலும் மற்றும் தமிழ்நாட்டின் அனுமதியின்றியும் மேகதாதுவில் அணை, நீர்த்தேக்கம் போன்ற எந்தவொரு திட்டத்தையும் செயல்படுத்துவதற்கு எந்த ஒரு நடவடிக்கையையும் கர்நாடக அரசு எடுக்கக் கூடாது என கர்நாடக அரசுக்கு உரிய அறிவுரைகள் மத்திய அரசு வழங்க வேண்டுமென்றும்; காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை மத்திய அரசு உடனடியாக அமைக்க வேண்டுமென்றும் மத்திய அரசை வலியுறுத்தி ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றியது.

இந்தத் தீர்மானத்தின்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அனுப்பிய கடிதத்தை தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த 55 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை 28-3-2015 அன்று நேரில் சந்தித்து வழங்கினார்கள். அப்போது சம்பந்தப்பட்ட துறையிடம் தற்போதைய நிலை குறித்த அனைத்து விவரங்களையும்

சேகரிக்க ஏற்கெனவே அறிவுறுத்தியுள்ளதாகவும், இதுகுறித்துப் பரிசீலிப்பதாகவும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் உறுதியளித்தார்கள்.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் 25-4-2015 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து, மேகதாது திட்டத்தினை கர்நாடக அரசு செயல்படுத்தக் கூடாது என கர்நாடக அரசுக்கு அறிவுறுத்தும்படி கோரி விளக்கமான கடிதத்தையும் அளித்தார்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை 7-8-2015 மற்றும் 14-6-2016 ஆகிய நாட்களில் நேரில் சந்தித்து, மேகதாது திட்டத்தினை கர்நாடக அரசு செயல்படுத்துவதை அனுமதிக்கக் கூடாது என வலியுறுத்தினார்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மேகதாது அணை உட்பட காவேரி ஆற்றின் குறுக்கே கர்நாடக அரசு காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை மீறும் வகையிலும், தமிழ்நாடு அரசின் இசைவு பெறாமலும், எந்தவொரு திட்டத்தையும் செயல்படுத்த உத்தேசிக்குமானால், தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்ட சட்டபூர்வமான அனைத்து நடவடிக்கைகளையும் தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும் என 18-8-2016 அன்று இம்மாமன்றத்தில் விதி 110-ன்கீழ் உறுதிபடத் தெரிவித்தார்கள்.

கர்நாடக அரசு மேகதாதுவில் அணை கட்டுவது தொடர்பாக மனு ஒன்றை 19-12-2016 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து அளித்தார்.

இதற்கிடையில் மாநில அரசுகள் தாக்கல் செய்த சிவில் வழக்குகள் விசாரணைக்கு உகந்ததா என்பதைப் பற்றி உச்ச நீதிமன்றத்தில் எல்லா மாநிலங்களும், மத்திய அரசும் வாதிட்டன. 9-12-2016 அன்று உச்ச நீதிமன்றம் அளித்த ஆணையில், இம்மனுக்கள் உச்ச நீதிமன்றத்தின் விசாரணைக்கு உகந்தவை என தீர்ப்பளித்தது. அதன் பின்னர் ஜூலை 2017 முதல் செப்டம்பர் 2017 வரை இறுதிகட்ட வாதங்கள் உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்றன. இதில் கர்நாடக அரசு 9 நாட்களும், கேரள அரசு 2 நாட்களும், தமிழ்நாடு அரசு 13 நாட்களும், புதுச்சேரி மற்றும் மத்திய அரசு தலா 1 நாளும் தங்கள் வாதங்களை எடுத்துரைத்தன. அனைத்துத் தரப்பு வாதங்களையும் கேட்டறிந்த உச்ச நீதிமன்றம் 16-2-2018 அன்று

தனது தீர்ப்பினை வழங்கியது. இத்தீர்ப்பின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

பன்மாநில நதிகள் தேசிய சொத்து. எந்த ஒரு மாநிலமும் தனி உரிமை கோர இயலாது என்ற நவம்பர், 1991 ஆம் ஆண்டைய உச்ச நீதிமன்றத்தின் கருத்து இத்தீர்ப்பில் மீண்டும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

1892 மற்றும் 1924 ஆம் ஆண்டைய ஒப்பந்தங்கள் செல்லத்தக்கதல்ல என்ற கர்நாடக அரசின் வாதம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

கர்நாடக அரசு தமிழ்நாட்டின் பாசனப் பரப்பான 24.708 இலட்சம் ஏக்கர் என்பதை 21 இலட்சம் ஏக்கர் எனக் குறைக்க வேண்டுமென நடுவர் மன்றத்தின்முன் வாதிட்டது. இதனை காவேரி நடுவர் மன்றம் ஏற்றுக்கொள்ளாமல், தமிழ்நாட்டின் பாசனப் பரப்பு 24.708 இலட்சம் ஏக்கர் என அதன் இறுதித் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது. இதனை உச்ச நீதிமன்றமும் ஏற்றுக்கொண்டுள்ளது.

பிற்பகல் 5-20

உச்ச நீதிமன்றம் தற்போது பிறப்பித்த ஆணைக்குப் பாதகம் ஏதும் இல்லாமல், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணைப்படி, மாதாந்திர அடிப்படையில் 15 ஆண்டுகளுக்கு தமிழ்நாட்டிற்கு நீர் வழங்கப்பட வேண்டும் என்பது உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

உச்ச நீதிமன்றம், அனைத்து மாநிலங்களின் வாதங்களை முழுமையாகக் கேட்டறிந்த பின்னர், கீழ்படுகை மாநிலங்களின் ஒப்புதல் இல்லாமல், மேல்படுகை மாநிலங்கள் எவ்விதக் கட்டுமானப் பணிகளையும் மேற்கொள்ளக் கூடாது என தெளிவான ஒரு தீர்ப்பை வழங்கியுள்ளது.

மேகதாது திட்டத்தைச் செயல்படுத்தக்கூடாது என்ற நமது நிலைப்பாட்டை, உச்ச நீதிமன்றத் தீர்ப்பிற்கு முன்னரும், பின்னரும், 25-2-2017, 27-2-2017, 4-9-2018, 8-10-2018 மற்றும் 22-11-2018 ஆகிய நாட்களில், நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதங்கள் மூலமாகவும், நேரடியாக சந்தித்தும், அணை கட்டுவதற்கான அனுமதியை மத்திய அரசு வழங்கக் கூடாது என தொடர்ந்து வலியுறுத்திக் கேட்டுக்கொண்டுள்ளேன். மேலும், 5-7-2017 மற்றும் 23-11-2017 ஆகிய நாட்களில் மத்திய நீர்வள ஆதாரத் துறை அமைச்சர்

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 டிசம்பர் 6

அவர்களை நேரில் சந்தித்தும், கடிதங்கள் வாயிலாகவும் கர்நாடக அரசிற்கு எவ்வித அனுமதியையும் மத்திய அரசு வழங்கக் கூடாது என வலியுறுத்தியுள்ளேன்.

மத்திய நீர்வளக் குழுமத்தின் தலைவராகவும், தற்போது காவேரி மேலாண்மை வாரியத்தின் தலைவராக கூடுதல் பொறுப்பு வகிப்பவரும் ஒருவரே. இவர் தலைமையில் இயங்கும் மத்திய நீர்வளக் குழுமம், தமிழ்நாடு தெரிவித்த மறுப்புகளையெல்லாம் பொருட்படுத்தாமல், மேகதாதுவில் புதிய அணை கட்ட விரிவான திட்ட அறிக்கையை தயாரிக்க கர்நாடக அரசிற்கு அனுமதி வழங்கியது. கர்நாடக அரசிற்கு மேகதாதுவில் அணை கட்டுவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு அனுமதி வழங்கிய அதேவேளையில், தமிழ்நாடு அரசின் ஒப்புதலின்றி எந்தவித அனுமதியும் வழங்க மாட்டோம் என்று ஊடகங்களில் செய்தி வெளியிடும் மத்திய நீர்வளக் குழுமத்தின் தலைவரது செயல், பிள்ளையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டிவிடும் செயலாக உள்ளது.

இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களையும் சம நிலையில் வைத்துப் பார்க்க வேண்டிய மத்திய அரசு, காவேரி நதிநீர்ப் பிரச்சினையில் தமிழ்நாட்டின் நிலைப்பாட்டை பல முறை எடுத்துரைத்தும், அதைக் கருத்தில் கொள்ளாமல் ஒருதலைபட்சமாக செயல்படுவது வேதனை அளிப்பதாக உள்ளது. ஏற்கெனவே, உச்ச நீதிமன்றம் பெங்களூரு நகரின் குடிநீர்த் தேவை உள்ளிட்ட பிற பயன்பாடுகளுக்காக 14.75 டி.எம்.சி. அடி நீரை கர்நாடகாவிற்குக் கூடுதலாக அளித்து உத்தரவிட்டுள்ளது. இவ்வாறு பெங்களூரு நகரின் குடிநீர்த் தேவையைக் கணக்கிட்டு, ஏற்கெனவே காவேரியில் தண்ணீர் பெற்ற பின்னர் மீண்டும் பெங்களூருவின் குடிநீர்த் தேவைக்கென 67 டி.எம்.சி. அடி நீர் கொள்ளளவு கொண்ட மேகதாது அணையைக் கட்ட கர்நாடகா முயற்சிப்பது, தமிழ்நாட்டை பாலைவனமாக்கும் உள்நோக்கம் கொண்ட ஒரு செயலாகும். இதற்குத் துணை போகும் மத்திய நீர்வளக் குழுமத்தின் செயல் கண்டிக்கத்தக்கதாகும்.

பெங்களூருவுக்கு குடிநீர் வழங்குதல் என்ற போர்வையில் கர்நாடக அரசு உத்தேசித்துள்ள மேகதாதுவில் அணை கட்டும் திட்டத்தினால், நீர் தேக்கும் கொள்ளளவு அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல் அம்மாநிலத்தின் பாசனப் பரப்பும் விரிவுபடுத்தப்படும். எனவே, இவ்வணை கட்டப்பட்டால்

தமிழ்நாட்டு மக்களின் வாழ்வாதாரமும், உரிமையும் கடுமையாக பாதிக்கப்படும். மேலும், நீர் பற்றாக்குறை ஏற்படும் ஆண்டுகளில், கடந்த காலங்களைப்போலவே காவேரி நீரை முழுமையாக தனது உபயோகத்திற்காகவே கர்நாடகா பயன்படுத்தும் நிலை உருவாகும்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், இந்த ஆண்டு தொடக்கத்தில் ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் தமிழ்நாட்டில் கடுமையான வறட்சி நிலவியது. மேட்டூர் நீர்த்தேக்கத்தில் மிகக் குறைவான அளவே நீர் இருந்தது. அப்போது கர்நாடக அணைகளில் சுமார் 50 டி.எம்.சி. அடி அளவுவரை தண்ணீர் இருந்தது. எனவே, தமிழ்நாட்டு மக்களின் தாகத்தினைப் போக்க மனிதாபிமான அடிப்படையில் மாண்புமிகு கர்நாடக முதலமைச்சர் அவர்களுக்கு, 13-1-2018 அன்று தமிழ்நாட்டின் நிலைமையை விளக்கி, உடனடியாக காவேரியில் 3 டி.எம்.சி. அடி நீரை விடுவிக்குமாறு கடிதம் வாயிலாக நான் கேட்டுக்கொண்டேன். மேலும், நான் நேரில் சந்திப்பதற்கு அவர்களிடம் நேரம் கேட்கப்பட்டது. ஆனால், அவர்கள் சந்திக்க நேரமும் ஒதுக்கவில்லை, நீரையும் தரவில்லை. அந்தக் காலகட்டத்தில் நமக்கு 70 டி.எம்.சி. அடி தண்ணீர் அவர்கள் தர வேண்டிய நிலையில், 3 டி.எம்.சி. அடி தண்ணீர் குடிப்பதற்காக நாம் கேட்டோம். அதைக்கூட கொடுக்க அவர்கள் மறுத்தார்கள். மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள், ஏன் செய்யவில்லை என்று கேட்கின்றார். அப்போது காங்கிரஸ் கட்சியின் ஆட்சிதான் கர்நாடகத்தில் இருந்தது. தமிழ்நாட்டு மக்கள் குடிப்பதற்கு 3 டி.எம்.சி. அடி தண்ணீர் கேட்டார்கள். அதைக்கூட தர மறுத்தது உங்களுடைய தேசிய கட்சியான காங்கிரஸ் கட்சி என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால் நான் இதனை விளக்கமாகச் சொல்ல வேண்டும். நீங்கள் அடிக்கடி குறுக்கிட்டுக் கொண்டேயிருந்தீர்கள். அதைத்தான் நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகின்றேன்.

அதைவிடுத்து, மேகதாதுவில் அணை கட்ட உத்தேசித்துள்ள இடத்தில் கர்நாடக நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் அவ்வப்போது ஆய்வு மேற்கொள்வது என்பது காவேரி நதிநீர்ப் பிரச்சினையை தேவையில்லாமல் பெரிதுபடுத்தும் நோக்கத்துடன், தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை தூண்டிவிடும் விதமாக உள்ளது. தமிழக வேளாண் பெருமக்களின் நலன்கள் பாதிப்பதால், தமிழ்நாடு இத்திட்டத்திற்கு மறுப்புகளைத் தெரிவித்துள்ளதாலும்,

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 டிசம்பர் 6

உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி தமிழ்நாட்டின் முன்னனுமதியைப் பெறாததாலும், கர்நாடகா விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கு மத்திய நீர்வளக் குழுமம் வழங்கியுள்ள அனுமதியை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டுமென உரிய அறிவுரையினை மத்திய நீர்வளக் குழுமத்திற்கு வழங்க வேண்டுமென நான் 27-11-2018 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் மற்றும் மாண்புமிகு நீர்வள ஆதாரத் துறை அமைச்சர் ஆகியோருக்குக் கடிதங்கள் வாயிலாக மீண்டும் வலியுறுத்தினேன். மேலும், சட்ட வல்லுநர்களின் ஆலோசனைப்படி, கர்நாடகத்திற்கு வழங்கியுள்ள அனுமதியை நிறுத்தி வைத்து உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென தமிழ்நாடு அரசின் சார்பில் 30-11-2018 அன்று உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனு உச்ச நீதிமன்றத்தில் விரைவில் விசாரணைக்கு வர உள்ளது.

பிற்பகல் 5-25

3-12-2018 அன்று நடைபெற்ற காவேரி மேலாண்மை ஆணையத்தின் கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழ்நாட்டின் பிரதிநிதிகள் மத்திய நீர்வளக் குழுமம் கர்நாடகத்திற்கு வழங்கிய அனுமதிக்குக் கடுமையான எதிர்ப்பினைத் தெரிவித்ததோடு மட்டுமல்லாமல், அதனை உடனடியாக திரும்பப்பெற வேண்டும் எனவும் வலியுறுத்தினர். மேலும், காவேரி நீரையே நம்பியுள்ள பல இலட்சம் தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கக்கூடிய இதுபோன்ற மிக முக்கியமான பிரச்சினைகளில், மத்திய நீர்வளக் குழுமம் உச்ச நீதிமன்றத் தீர்ப்பினைக் கருத்தில்கொள்ளாமல் எந்த முடிவும் எடுக்க வேண்டாமென அக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. இதைத்தவிர காவேரி படுகையில் மேற்படுகை மாநிலமான கர்நாடக அரசு புதிய அணையைக் கட்டுவதற்கான எந்தவொரு அனுமதியையும் மத்திய அரசு வழங்கக் கூடாது என்றும் உறுதிபட எடுத்துரைக்கப்பட்டது. மேலும், உச்ச நீதிமன்ற ஆணைக்கெதிராக கர்நாடக அரசின் மேகதாது திட்டத்திற்கென விரிவான திட்ட அறிக்கைக்கு அனுமதி வழங்கிய மத்திய நீர்வளக் குழுமத்தின் தலைவர், கர்நாடக நீர்வளத் துறை அமைச்சர் மற்றும் கர்நாடக உயரதிகாரிகள்மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு 5-12-2018 அன்று உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1986 ஆம் ஆண்டில் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் மீண்டும் துவக்கப்பட்ட சட்டப் போராட்டத்தைத்

*2018 டிசம்பர் 6]* [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

*தொடர்ந்து, காவேரி நடுவர் மன்றம் அமைத்தது, அதை மத்திய அரசிதழில் வெளியிடச் செய்தது, நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையின்படி, காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைக்க உச்ச நீதிமன்றத்தை நாடியது, உச்ச நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பைப் பெற்றது, அதன்பின்னர், காவேரி மேலாண்மை ஆணையம் அமைக்க முனைப்புடன் பாடுபட்டதென, நீண்ட, நெடுங்கால சட்டப் போராட்டத்திற்குப் பின்னர் நிலைநிறுத்தப்பட்ட தமிழ்நாட்டு மக்களின் அடிப்படை உரிமையையும், டெல்டா விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும் பேணிக்காக்க வேண்டியது நம் எல்லோரின் கடமையாகும். இந்தக் கடமையை செவ்வனே நிறைவேற்றி, உச்ச நீதிமன்றம் அளித்த இறுதித் தீர்ப்பினை செயல்பாட்டிற்குக் கொண்டுவந்து, காவேரியில் தமிழ்நாட்டிற்கான உரிய பங்கு நீரினைப் பெறும்பொருட்டு, காலம் தாழ்த்தாமல் உடனுக்குடன் மத்திய அரசுக்கு தமிழ்நாடு அரசு தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகின்ற நிலையில், மத்திய நீர்வளக் குழுமம் கர்நாடக அரசுக்கு வழங்கியுள்ள அனுமதியைத் திரும்பப்பெற வேண்டுமென்று வலியுறுத்தியும், மேகதாது அல்லது கர்நாடகாவின் காவேரி படுகையில் எந்தவொரு இடத்திலும் எவ்விதக் கட்டுமானப் பணிகளும் மேற்கொள்ளக்கூடாது என கர்நாடக அரசுக்கு மத்திய அரசு உத்தரவிட வேண்டுமென்றும் நான் முன்மொழிந்த இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

**திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இத்தீர்மானத்தின்மீது நீண்ட பதிலைத் தந்திருக்கிறார்கள். அவருடைய பதிலில் முற்பகுதி முழுவதும் காவேரியினுடைய வரலாற்றைச் சுருக்கமாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். முதல்வர் அவர்கள் அ.தி.மு.க.-வுக்கு மட்டும் முதல்வர் அல்ல. எங்களுக்கும் முதல்வர், நாட்டுக்கும் முதல்வர். பொதுவாக சட்டமன்றத்தில்* suppression of facts, *செய்யக் கூடாத ஒன்று. மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் நான் கேட்டுக்கொள்வதெல்லாம், மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர்.*

[திரு. துரைமுருகன்] [2018 டிசம்பர் 6

அவர்களும், மாண்புமிகு அம்மையார் அவர்களும் இருந்த காலத்தில் காவேரி நீர் பெறுவதற்காக என்னென்ன செய்தார்கள் என்று சொன்னதிலே மாறுபட்டாலும் நான் இப்போது அதைப்பற்றி பேசப் போவதில்லை. அதற்குக் காரணம், நான் மாறுபட்டுப் பேசினால் இந்தத் தீர்மானம் திசைமாறி போய்விடும். நாளைக்கு வெளியிலே இரண்டு கட்சிகளும் அடித்துக்கொண்டார்கள் என்று செய்தி போடுவார்கள். ஆனால், காவேரியிலே நமக்கு ஒரு பிரச்சினை இருக்கிறதென்று முதன்முதலாக கர்நாடக அரசோடு பேசியவர் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பிரச்சினையை திரு. கே.எல். ராவ் அவர்கள்மூலம் மத்திய சர்க்காருக்குக் கொண்டு சென்றவரும் கலைஞர் அவர்கள்தான். அதற்குப் பிறகு காவேரியிலே எவ்வளவு நீர் இருக்கிறது என்பதை அறிய Fact Finding Committee போட்டு, 240 டி.எம்.சி. அடி நீர் நமக்கு உண்டு என்று கண்டுபிடித்தவரும் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகு, திரு. வி.பி. சிங் அவர்கள் இருந்த காலத்திலே நடுவர் மன்றத்தைக் கொண்டு வந்தவரும் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நடுவர் மன்றத்திற்கு இடைக்கால தீர்ப்பு வேண்டுமென்று கேட்டவரும் கலைஞர் அவர்கள்தான். அந்த இடைக்கால தீர்ப்புக்கு அதிகாரம் இல்லையென்று நடுவர் மன்றம் சொன்னவுடன், Supreme Court-க்குச் சென்று உண்டா, இல்லையா என்று கேட்டு, உண்டு என்ற அதிகாரத்தைக் கொண்டு வந்தவரும் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) 205 டி.எம்.சி. அடி நீரைக் கொண்டு வந்தவரும் கலைஞர் அவர்கள்தான். அதற்காக திரு. வாஜ்பாய் அவர்கள் தலைமையில் ஓர் ஆணையத்தைப் போட்டவரும் கலைஞர் அவர்கள்தான். இறுதித் தீர்ப்பைக் கொண்டு வந்தவரும் கலைஞர் அவர்கள்தான். இவ்வளவு பெரிய நிகழ்ச்சியை அப்படியே மறைத்துவிட்டு-- ஏனென்றால், இது fact. இதை மறைத்துவிட்டு இந்த அவையிலே நீங்கள் பேசுவது சரியா? ஏனென்றால், நீங்கள் முதலமைச்சர், உங்களுடைய சொல்தான் முக்கியம்.

பிற்பகல் 5-30

இவ்வளவு பெரிய fact-ஐ நானும் மறைக்கக் கூடாது; நீங்களும் மறைக்கக் கூடாது. இது சட்டமன்றம். இந்தச் சட்டமன்றத்தில் அவ்வளவு விஷயங்கள் நடந்திருக்கின்றன. ஆக, அந்த மாமேதை கலைஞர் அவர்களுடைய பெயரைக் கொஞ்சம்கூட நீங்கள்

*2018 டிசம்பர் 6*] [*திரு. துரைமுருகன்*]

*சொல்லாமல் இருந்தது எங்களுக்கு வருத்தம்தான். நியாயமாக, இதை எதிர்த்து நாங்கள் வெளிநடப்புச் செய்வோம். ஆனால், எங்களுடைய உணர்ச்சியை அடக்கிக் கொண்டு, அதைவிட காவேரிப் பிரச்சினை முக்கியம் என்று கருதி, அவையில் உட்கார்ந்து, உங்களுக்கு எங்கள் தலைவர் ஆதரவு கொடுத்திருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.* I am sorry to say Sir. But it is highly not fair on our Chief Minister's part.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபொழுது, 'என்ன செய்தீர்கள், என்ன செய்தீர்கள்?' என்று கேட்டார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், 'என்ன செய்தீர்கள், என்ன செய்தீர்கள்?' என்று கேட்டார்கள். ஆகவே, நாங்கள் செய்ததைத்தான் தெரிவித்தோம். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் செய்யாததை ஒன்றும் சொல்லவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் ஏன் செய்யவில்லை, ஏன் செய்யவில்லை என்று கோடிட்டு, கோடிட்டுக் காட்டினார்கள். நாங்கள் என்னென்ன செய்தோம் என்பதை எங்கள் தரப்பிலிருந்து நாங்கள் கூறுகிறோம். உங்கள் தரப்பில் கூற வேண்டாம் என்று நாங்கள் சொல்லவே இல்லையே! அதைத் தடுக்கவும் இல்லையே! ஆகவே, எங்களைப் பொறுத்தவரையில். . . (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் எழுந்து ஏதோ பேசினார்.)*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *இங்கே கூச்சல்-குழப்பம் வேண்டாம். கொஞ்சம் அமைதியாக இருங்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. அன்பழகன், இது முறையில்லை. (குறுக்கீடுகள்) அது அவைக் குறிப்பில் ஏறாது.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *இது காவேரி நதிநீர்ப் பிரச்சினை. (குறுக்கீடு) ஏனென்றால், நான் விவசாயி. அதுபற்றி எனக்குத் தெரியும்; ஆனால், உங்களுக்குத் தெரியாது. ஏனென்றால்,*

*நீங்கள் சென்னையில் இருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்குத் தெரிவதற்கு வாய்ப்பில்லை. (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. அன்பழகன். . . (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *நான் அந்த நீரைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. அன்பழகன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *உணர்வுபூர்வமான கருத்தைத்தான் நான் இங்கே பேசிக் கொண்டிருக்கிறேன். ஆகவே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். . . (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. அன்பழகன், உட்காருங்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் தெரிவித்தார். . . (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசியதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *நீங்கள் சொல்வதை நாங்கள் தடுக்கவில்லை. எங்களுடைய தலைவர்கள், காவேரிப் பிரச்சினையில் என்னென்ன செய்திருக்கிறார்கள் என்பதைப்பற்றிப் பேசுவதற்கு எங்களுக்கு உரிமை இருக்கின்றது. அந்த உரிமையின் அடிப்படையில் பேசுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களைத் தவறாக எந்த இடத்திலும் நான் சொல்லவில்லை. உங்கள் தலைவரைப்பற்றி எந்த இடத்திலும் தவறாக நான் பேசவில்லை. (குறுக்கீடுகள்) இது என்ன கூட்டமா? (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இருங்கள். (குறுக்கீடுகள்) இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நான் நிற்கிறேன் அல்லவா! பேரவைத் தலைவர் நிற்கும்போது நீங்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர்*

*திரு. அன்பழகன். . . (குறுக்கீடு) இருங்கள், எல்லாம் தெரிகிறது. ஆனால், அவர் பேசியது என்னவென்று உங்களுக்குத் தெரிகிறதா? (குறுக்கீடுகள்) அவர் என்ன வார்த்தையைப் பயன்படுத்தினார் என்பது உங்களுக்குத் தெரியுமா? அதுவெல்லாம் சரியில்லை. (குறுக்கீடுகள்) முறையில்லை. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கேட்ட கேள்விகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்னார். விளக்கத்தைச் சொன்னார். அவர் எங்களுடைய தலைவரின் பெயரை விட்டுவிட்டீர்கள் என்று சொன்னார். அவர், எந்த இடத்திலும் உங்களுடைய தலைவரின் பெயரைத் தவறாகச் சொல்லவில்லை, நாங்கள் செய்ததைச் சொன்னோம் என்று அவர் சொல்லியிருக்கிறார். இதுதான் விளக்கம்; அவ்வளவுதான். திரு. அன்பழகன், நீங்கள் பேசுவது சரியில்லை. இது முறையும் அல்ல. இப்படி எல்லாம் ஒரு முதலமைச்சரை நீங்கள் மரியாதை இல்லாமல் பேசுவது முறையில்லை. இன்றைக்கு ஒரு சிறப்பான தீர்மானம்; இந்தத் தீர்மானத்தின் அவசியம் கருதி, உங்கள் நடவடிக்கை குறித்து மேற்கொண்டு எதுவும் பேசாமல் இத்தோடு விட்டுவிடுகிறேன். ஆகவே, முக்கியமான இந்தத் தீர்மானத்திலே முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளை நீங்கள் ஏற்று, ஒருமனதாக இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தருவதற்கு ஒத்துழைப்பு அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசினார். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் பேசினார். காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களும் பேசினார். மற்ற உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய கருத்துகளை எடுத்து வைத்தார்கள். அதனடிப்படையிலே என்னுடைய கருத்துகளையும் நான் இங்கே எடுத்து வைத்தேன். ஆகவே, எந்தவித முரண்பட்ட கருத்துகளையும் நான் எடுத்து வைக்கவில்லை. அதற்குப் பிறகு மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், அவருடைய தலைவர் செய்த சாதனைகளைப் பற்றியெல்லாம் சொன்னார். அது அமைதியாக போய்க் கொண்டிருந்தது. வேண்டுமென்றே இடையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்கள் ஒருமையில் பேசியது எவ்வாறு சரியாக இருக்கும்?*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன். அது வேண்டாம். இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்வது, இந்த முக்கியமான தீர்மானத்தின்போது வேறு எதுவும் தேவையில்லை. ஆகவே, அதை விட்டுவிடலாம். இப்பொழுது தீர்மானத்தைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலோடு, அவருடைய வேண்டுகோளை ஏற்று, இந்தத் தீர்மானத்தை பேரவையின் முடிவிற்கு விடுகிறேன்.*

*பிற்பகல் 5-35*

*மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க.*

*மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.*

*மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

## 1. அரசினர் தீர்மானங்கள்—*தொடர்ச்சி*

## (ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"பேரவை விதி 25(1)-ன்கீழ் பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்"*

*என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*